இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

3/-

மாதமிரு இதழ் — 447 ● 1994 ஏப்ரல் 22 வெள்ளிக்கிழமை

Periodicals Division
Library

**தொழிலாளர் பேராளர் மாநாடு**

★ தேசியவாதத் துரோகத் தொழிலாளர் அதிகாரத்துவங்களில் இருந்து பிரிவோம்!

★ தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்தைக் கட்டியெழுப்பு!

★ ஏகாதிபத்தியச் சார்பு யூ.என்.பி அரசாங்கத்தை வெளியேற்று!

★ தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தை நிறுவு!

கொழும்பு பொதுநூலக கேட்போர் கூடம்

ஜூன் 19ம் திகதி ஞாயிறு காலை 10 மணி

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் / இளம் சோசலிஸ்டுகள்

## மே தினம்: 1994

# யுத்தம், பாசிச ஆபத்தை எதிர்கொள்வோம்! சோசலிச அனைத்துலகத் தொழிலாளர் இயக்கத்துக்கு புனர்வாழ்வு அளிப்போம்!

### தொழிலாளர் பாதை ஆசிரியர் குழு அறிக்கை

தொழிலாளர்களின் அனைத்துலக, விடுமுறை தினமான இந்த மே தினத்தில் தொழிலாளர்கள் உலக முதலாளித்துவ நெருக்கடியின் பொருளாதார, சமூக, அரசியல் தாக்கங்களை இருப்பெடுக்க வேண்டும்.

இன்றுள்ள சமூக அமைப்பு ஒரு பிரமாண்டமான நோயினால் பெரும் அளவில் பீடிக்கப்பட்டுள்ளது என்பது மறுக்க முடியாதது. பஞ்சமும், வேலையின்மையும் பெருகிக் கொண்டுள்ளன. 'சுதந்திர அமைப்பு' என்ற பேரில் சமூக செல்வம் பெருமளவில் கைமாற்றப்பட்டு வருகின்றது. சமூக உடைமையின் கீழான கணனி, தொலைத் தொடர்பு தொழில்நுட்பங்களிலான புரட்சிகர முன்னேற்றங்கள் உலக மக்களின் வாழ்க்கைத் தரங்களில் ஒரு பிரமாண்டமான அதிகரிப்புக்கு உதவும். இன்று அவை பெரும் வர்த்தக நிறுவனங்களால் கண்ணியமான சம்பளம் கொண்ட தொழில்களை அழிக்கவும் தொழிலாளர்களை குறைந்த சம்பள, தற்காலிக தொழிலாளர் அந்தஸ்துக்குத் தள்ளவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

உலகம் பூராவும் உள்ள முதலாளித்துவ நிறுவனங்களும் அரசாங்கங்களும் தொழிலாளர் வர்க்கத்தின் கடந்த காலத் தேட்டங்களை முற்றுகையிட்டுக் கொண்டுள்ளன. நிதி ஏகபோகங்களின் தனிப்பட்ட அதிஷ்டங்களை கூட்டும் பொருட்டு வீடமைப்பு, சுகாதாரம், பொதுக் கல்வி என்பன நிராகரிக்கப்பட்டு வருகின்றன.

இனவாத, பாசிச சக்திகளின் பெருக்கமானது முதலாளித்துவ சமுதாயத்தின் ஆழமான நோயின் ஒரு அறிகுறியாகும். பெனிட்டோ முசோலியினின் வாரிசுகளான 'இத்தாலியன் சோசல் மூவ்மன்ட் (MSI) இத்தாலி அரசாங்கத்தினுள் நுழைந்து கொண்டுள்ளமை உலக விவகாரங்களில் ஒரு திருப்புமுனையைக் குறித்து நிற்கின்றது. உரோமில் முழு ஸ்திரமற்ற வலதுசாரி கூட்டரசாங்கத்தின் உடனடித் தலைவிதி என்னவாக இருந்தபோதிலும், இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் முதற் தடவையாக ஒரு பாசிசக் கட்சி தெரிவு செய்யப்பட்ட ஐரோப்பிய அரசாங்கத்தினுள் அனுமதிக்கப்பட்டமை தொழிலாள வர்க்கத்துக்கு ஒரு எச்சரிக்கையாகும்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னைய ஒழுங்கு முறையின் வீழ்ச்சியும், பொருளாதாரச் செழிப்பு உலகப் பொருளாதாரப் பின்னடைவாக மாறியமையும் மீண்டும் ஒரு முறை ஏகாதிபத்தியச் சக்திகளிடையே ஏகாபத்திய யுத்தத்திற்கான உந்து சக்தியான சந்தைகள், மூலப் பொருட்கள், மலிவு உழைப்புக்கான பழைய மோதல்களை கட்டவிழ்த்து விட்டுள்ளது. முதலாளித்துவம் இந்த நூற்றாண்டில் ஏற்கனவே இரண்டு உலக யுத்தங்களை உண்டுபண்ணிற்று. ஒரு மூன்றாவது உலகளாவிய தீப்பிளம்புக்கான ஆபத்து பொஸ்னியாவிலான இனவாத இரத்தக்களரியினதும் ஏகாதிபத்தியச் சூழ்ச்சிகளினதும் கூட்டினால் முன் அனுமானிக்கப்படுகிறது. முன்னைய யூகோசலாவியா ருஷ்யாவிலும், கிழக்கு ஐரோப்பாவிலும், பாரசீக வளைகுடாவிலும், ஆபிரிக்கக் கண்டத்திலும், கொறியன் தீபகற்பத்திலும் இடம்பெறும் தொடர்ச்சியான பெரும் வன்செயல்களில் பெரிதும் ஒளிவிட்டு பிரகாசிக்கும் ஒன்று மட்டுமேயாகும்.

### காலனித்துவ ஆட்சியின் பரம்பரைச் சொத்து

ருவாண்டாவை விழுங்கிக் கொண்டுள்ள இரத்தக்களரி ஆபிரிக்க, ஆசிய, மத்திய கிழக்கு, லத்தீன் அமெரிக்காவிலான தசாப்தக் கணக்கான காலனித்துவ ஆட்சியின் முதுசத்தின் மிகச் சமீபகால பயங்கர உதாரணமாகும். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னைய ஐக்கிய நாடுகள் சபையினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் ஆதரவின் கீழான ஆபிரிக்க, ஆசிய காலனிகள் ஒழிப்பானது சமூக, பொருளாதார முன்னேற்றத்தை முதலாளித்துவ கட்டுமானத்தினுள் அடைந்து கொள்ள முடியும் என்ற வாதத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அத்தகைய வாதங்கள், இந்தப் பரந்த கண்டங்கள் பூராவும் வறுமையும் உள்நாட்டு யுத்தமும் கோடானுகோடி மக்களின் நிலைமைகளை 100 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததை விட மோசமாக்கியதைத் தொடர்ந்து உதவாக்கரையானது என்பதை நிரூபித்துள்ளது.

இருபதாம் நூற்றாண்டின் முடிவில் நான்காம் அகிலத்தின் ஸ்தாபக வேலைத்திட்டத்தில் எழுப்பப்பட்ட வரலாற்றுப் பதிலீடான சோசலிசமா? அல்லது காட்டுமிராண்டித்தனமா? என்பது முழுப் பலத்துடன் திரும்பவும் உறுதிப்பட்டு நிற்கின்றது.

தொழிலாளர் வர்க்கம் புரட்சிகரப் பணிகளை எதிர் கொண்டுள்ளது. உற்பத்திச் சாதனங்களை தனிச் சொத்துடைமையாக வைத்திருப்பதாலும் இலாப முறையின் வரம்பினுள் உலகினை போட்டி தேசிய அரசுகளாக பிரிப்பதாலும் விடிவு கிட்டாது. புரட்சிகர ஒன்றிணைவுக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் அணிதிரள்வுக்குமான புறநிலைத் தேவைகள் இன்று இருந்து கொண்டுள்ளன. உற்பத்தியின் பூகோளமயமாக்கம் தொழிலாளர்களுக்கு இடையேயான பிணைப்புக்களை முன்னர் ஒருபோதும் இல்லாத விதத்தில் பலப்படுத்தியுள்ளது. எந்தவொரு கண்டத்திலும் தொழிலாளர்கள் ஒரே ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களால் சுரண்டப்படுகின்றனர். முன்னேறிய கைத்தொழில் நாடுகளின் தொழிலாளர் வர்க்கத்துக்கும் பின்தங்கிய நாடுகளின் தொழிலாளர்களுக்கும் இடையேயான பழைய பிளவுகள் கடந்த காலத்தில் ஏகாதிபத்திய மையங்களிலான

(10-ம் பக்கம் பார்க்க)

## மே தினம்:1994

- உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!
- சோசலிச அனைத்துலகவாதத்துக்காக போராடு!
- நான்காம் அகிலத்தை கட்டியெழுப்பு!
- சோசலிச குடியரசு ஒன்றியத்தை நோக்கி முன்னேறு!

ஊர்வலம்: மே 1 பகல் 1 மணி

கொழும்பு நியூஹாம் சதுக்கம்

(கொச்சிக்கடை தேவாலயம் அருகில்)

கூட்டம் மாலை 4 மணி

கொட்டாஞ்சேனை இரத்தினம் மைதானம்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்,
இளம் சோசலிஸ்டுகள்

(நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளை)

**வடக்கு— கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம்

# "பேர்னாட் : எதற்கும் சம்மதமான மனிதன்"



பேர்னாட் சொய்சா

சமசமாஜ கட்சித் தலைவர் பேர்னாட் சொய்சாவின் 80 ஆண்டு நிறைவையொட்டி கொழும்பு நவரங்கஹல மண்டபத்தில் நடைபெற்ற கூட்டம் பற்றிய அறிக்கையை யூ. என். பி. அரசாங்கத்தின் ஏரிக்கரைப் பத்திரிகையான 'டெயிலி நியூஸ்' மேற்கண்ட தலையங்கத்துடன் முதற் பக்கத்தில் கலகலப்புடன் பிரசுரித்திருந்தது. பேர்னாட் சொய்சாவுக்கு முதலாளி வர்க்கத்திடம் இருந்து கிடைத்துள்ள இந்தக் கௌரவத்தையிட்டு விவாதிக்க எதுவும் இல்லை.

''மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக அவரின் குணநலன்களும் சாதனைகளும் வர்ணிக்கப்பட்டன. அவர் சாதாரணமான, நெருங்கிப் பழகக் கூடிய, அகங்காரம் இல்லாத ஒரு தலைவருக்கு, கட்சிக்கு, இடதுசாரி இயக்கத்துக்கு, நாட்டிற்கு நேசமான ஒருவராக விளங்கினார். சுடும் வார்த்தைப் பிரயோகங்களை அவர் தவிர்த்து வந்தார்''

(டெயிலி நியூஸ்)

பேர்னாட் சொய்சா சொன்னதும் செய்ததும் எது என்பதை முதலாளி வர்க்கம் அறியும். பேர்னாட் சொய்சாவும் சமசமாஜக் கட்சியும் எதுவித சக்தியும் அற்றுச் சேடம் இழுக்கும் நிலையிலும் அதனிடமிருந்து கறக்கக்கூடிய இறுதித் துளியையும் கறந்துஎடுப்பதில் முதலாளிவர்க்கம் விழிப்பாக உள்ளது. இந்தப் பாராட்டு விழாவில் பேசிய இலங்கை முதலாளி வர்க்கத்தினதும் ஏகாதிபத்தியத்தினதும் நனவான ஏஜண்டும், யூ. என். பி. அமைச்சருமான இ. தொ. கா. தலைவர் சௌ. தொண்டமான் கூறியதாவது;

''உங்களின் தூதுப் பயணம் இன்னமும் முற்றுப்பெற்றுவிடவில்லை. உங்களின் செயற்திறன் மிக்க செயற்பாடு நாட்டுக்கு அவசியம். நாடு முன்னர் ஒரு போதும் இல்லாத அளவிலான நெருக்கடிக்குள் மூழ்கியுள்ளது. தங்களின் செயற்திறன் மிக்க பங்களிப்புக்கள் அவசியமாகியுள்ளது.'' தம்மைப் பற்றிய குணநலச் சிறப்புக்களைக் கேட்டு ஆனந்தக் கண்ணீர் சிந்தியதோடு நின்றுவிடாத பேர்னாட் சொய்சாவும், அவரின் தலைமையிலான லங்கா சமசமாஜக் கட்சியின் தோழர்களும் 'நாட்டுக்கு' அவசியமான 'செயற்திறன்மிக்க பணியை' இட்டுநிரப்பத் திடசங்கற்பம் பூண்டுள்ளார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

முதலாளி வர்க்கம் பேர்னாட் சொய்சாவைக் கொண்டாடுவது அவரின் ஒன்றரைத் தசாப்தகால புரட்சிகர, ட்ரொட்ஸ்கிச கடந்த காலத்தைக் கணக்கில் கொண்டல்ல. இந்த 80வது பிறந்த தினத்தில் ஒரு முக்கியமான விடயம் அம்பலத்துக்கு வந்துள்ளது. அக்காலத்தில் பேர்னாட் சொய்சா வர்க்க சமரசவாதியாக இருந்துள்ளார். சொய்சாவின் நீண்டகால நண்பரும் 1950பதுகளில் ல. ச. ச. க.ல் இருந்து முதலாளித்துவ முகாமுக்குப் பாய்ந்தவருமான ரீ.பி.சுபசிங்க மார்ச் 20ம் திகதிய மேற்படி கூட்டத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''அவர் சமாதானத்தின் மனிதன். ...1940பதுகளில் அவர் போராடிய இடதுசாரிக் குழுக்களான ல.ச.ச.க. பீ.எல். பீ. கட்சிகளுக்கு இடையே சமாதான புருஷராக விளங்கினார். இப்போது அவர் 1945ல் (ஆண்டு தவறானது) ஏற்பட்ட பிளவைச் சுகப்படுத்தி ல.ச.ச.க—கம்யூனிஸ்ட் கட்சியை ஐக்கியப்படுத்தியுள்ளார்'' இந்த விதத்தில் சொய்சா ஒரு சமரசவாதியாகவே கொண்டாடப்படுகின்றார்.

1994ம் ஆண்டு, பேர்னாட் சொய்சாவின் 80வது பிறந்த தினத்தையும், அவர் ஒரு முன்னணிப் புள்ளியாக நின்று செயற்பட்ட ல.ச.ச.க.வின் மாபெரும் காட்டிக்கொடுப்பின் 30வது ஆண்டு பூர்த்தியையும் குறித்து நிற்பதோடு, சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் இரண்டையும் ஒன்றாகக் கரைத்து புதியதொரு முதலாளித்துவக் கட்சியை சிருஷ்டித்த ஆண்டினையும் குறித்து நிற்கின்றது. பேர்னாட் சொய்சாவும், சமசமாஜ புரட்சிகர வரலாற்றுடன் துளியளவும் உறவுகொண்டிராத இன்றைய கட்சியின் பொதுச் செயலாளர் பற்றி வீரக்கோன் உட்பட்ட கோஷ்டி கூறுவது என்ன? 1940பதுகளில் பீட்டர் கெனமன், எஸ்.ஏ.விக்கிரமசிங்க முதலான ஸ்டாலினிச கும்பல்களை சமசமாஜ கட்சியிலிருந்து விலக்கியது, அன்றைய ட்ரொட்ஸ்கிச—ஸ்டாலினிச கருத்துவேறுபாடுகளால் எனவும் இன்று சோவியத் யூனியன் வீழ்ச்சி கண்டதின் பின்னர் அந்தக் கருத்து வேறுபாடுகளுக்கான அடிப்படை இல்லாது போய்விட்டதாயும் கூறுகின்றனர். இந்தக் கடைகெட்ட வாதம், ட்ரொட்ஸ்கிசத்தில் இருந்து ஓட்டமெடுத்து முதலாளி வர்க்க முகாமில் சேர்ந்து கொண்டவர்களுக்கும் பொருந்தும்.

மூன்றாம் அகிலம் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்க நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்பாக இல்லாது போய்விட்டதால் அதில் தமக்கு விசுவாசம் கிடையாது என 1939ல் ல.ச.ச.க. மத்திய குழுவில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை எதிர்த்து வாக்களித்தமைத் தொடர்ந்தே ஸ்டாலினிஸ்டுகள் சமசமாஜக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இதைத் தொடர்ந்து கட்சி அனைத்துலகவாதத்தில் உறுதியாகக் காலூன்றி நின்றதோடு, நான்காம் அகிலத்தில் சேர்ந்து அதன் பிராந்திய கிளையாக இந்திய போல்ஷிவிக் — லெனினிஸ்ட் கட்சியை நிறுவியதோடு, சமசமாஜக் கட்சியை அதன் இலங்கை அலகாக்கியது.

பேர்னாட் சொய்சா—சுபசிங்க கூறும் இந்த 'சமரசவாதி' 1942 — 45ல் பீ. எல். பி ஐ. விதிமுறைகளுக்கு எதிராக இந்தியாவில் குட்டி முதலாளித்துவ காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சிக்கும் இலங்கையில் முதலாளித்துவ தேசிய அரசாங்கத்துக்கும் ஆதரவு காட்ட வேண்டும் எனக் கூறியதோடு, வேறாக ஒரு சமசமாஜக் கட்சியை அமைப்பதில் இறங்கிய மக்கள் முன்னணி என்.எம்.பெரேரா, பிலிப் குணவர்த்தனவுடன் சமரசமாகச் செயற்பட்டார்.

சொய்சாவை 'சமரசவாதியாக' இட்டுச் சென்ற சமசமாஜ கட்சியின் இந்த பரிணாமத்தினை முதலாளி வர்க்கம் சதா கொண்டாடும். அனைத்து முதலாளி வர்க்கக் கட்சிகளதும் அங்கீகாரத்துக்குரிய ஒரு கனவானாக சொய்சா இடம் பிடித்தது அதன் ஒரு பாகமாகவே. சமசமாஜ தலைவர்கள் தேசியவாத, சீர்திருத்தவாத வாயடிப்புக்களில் ஈடுபட்ட காலப்பகுதி அடியோடு ஒழிந்து மறைந்துவிட்டது. இது அனைத்துலக ரீதியில் அனைத்து தேசியவாதிகளும் முகம் கொடுக்கும் நிலைமையாகும். கா[...]லோவாதத்துக்கும் அதன[...] இலங்கை ஏஜன்சியாகிய[...] சமசமாஜ கட்சியின் சந்தர்ப்பவாத அரசியலுக்கு எதிராக ட்ரொட்ஸ்கிச அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்தினை காக்கும் போராட்டத்தினை முன்னெடுத்தது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவே. 1968ல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஸ்தாபிதத்துடன் இப் போராட்டம் இலங்கையினுள் முன்னெடுக்கப்பட்டது.

## இந்திய காங்கிரஸ் வரவு செலவுத்திட்டம்:

# ட்ரான்ஸ் நஷனல் கம்பனிகளுக்கு கதவுகளை அகலத் திறந்துள்ளது

பெப்ரவரி 28ம் திகதி இந்திய நிதி அமைச்சர் மன்மோகன் சிங்கினால் லோக் சபாவில் சமர்ப்பிக்கப்பட்ட 1994/95 நிதி ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம், ஏகாதிபத்திய ட்ரான்ஸ் நஷனல் கம்பனிகளின் இலாபக் கொள்ளைக்கு இந்தியாவை மேலும் அகலத் திறந்து விட்டுள்ளதோடு, கோடானுகோடி தொழிலாளர் வர்க்க, ஒடுக்கப்படும் மக்கள் மேலான தாக்குதல்களைத் தீவிரமாக்கியும் உள்ளது.

ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளுக்கும் அவற்றின் இந்திய ஏஜன்டுகளுக்கும் இந்த வரவு செலவுத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள சலுகைகளையிட்டு உள்ளம் பூரித்துப்போன இந்திய கைத்தொழில் சம்மேளனத்தின் கிழக்கு வலயத்தின் உபதலைவர் சஞ்ஜீவ் கொலுன்னா கூறியதாவது: ''இந்தியாவை பூகோளமயமான பொருளாதாரத்துடன் இணைக்கும் பொருட்டு மேலும் வழிசமைக்கும் உறுதியான வரவு செலவுத் திட்டத்துடன் நிதி அமைச்சரின் நம்பிக்கையும் வெற்றியும் வெளிப்பாடாகியுள்ளது'' என்றுள்ளார்.

ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள முக்கிய சலுகையாக உள்நாட்டுக் கம்பனிகளிடம் இருந்து அறவிட்டுவந்த கம்பனி வரிகளை 4 % வரை குறைத்துள்ளதை குறிப்பிடலாம். அவ்வாறே வெளிநாட்டவர்களதும் — இந்தியாவினுள் வருமானம் சம்பாதிக்கின்றதுமான கம்பனிகளிடம் இருந்து அறவிட்டு வந்த வரி 65%தில் இருந்து 55%மாக குறைக்கப்பட்டுள்ளது. அத்தோடு உள்நாட்டு கம்பனிகளிடம் இருந்து அறவிட்டு வந்த மூலதனவரி 40%ல் இருந்து 20%வரை குறைக்கப் பட்டுள்ளது.

முதலாளித்துவ கைத்தொழில் அதிபர்களதும் வர்த்தகர்களதும் வேண்[...] பேரில் அகில இ[...] நிறுவனங்களதும் வர்த்தக வங்கிகளதும் குறைந்தபட்ச வட்டி வீதம் 15%ல் இருந்து 14%மாக குறைக்கப்படுவதாகவும் மன்மோகன்சிங் இந்த வரவு செலவுத் திட்டப் பேச்சில் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் கட்சி அரசாங்கத்தின் இந்த வரவு செலவுத் திட்டத்தில் சுங்கவரியும், இறக்குமதி வரியும் மேலும் குறைக்கப்பட்டுள்ளது. இதுகாறும் 85%மாக இருந்துவந்த சுங்க வரி 65%மாக குறைக்கப்பட்டுள்ளது. பொது மூலதனப் பண்டங்களின் மீதான சுங்க வரி 35%ல் இருந்து 25%மாக குறைக்கப்பட்டுள்ளது. கணனி உதிரிப் பாகங்களுக்கான இறக்குமதி வரி 80%ல் இருந்து 50%மாக குறைக்கப் பட்டுள்ளது.

இந்த விதத்தில் இறக்குமதி வரி பிரமாண்டமான முறையில் குறைக்கப்பட்டமை இந்தியாவினுள் ட்ரான்ஸ்நஷ[...] கைத்தொழில்களை நடாத்த வழங்கப்பட்டுள்ள சலுகையாகும்.

### கண்ணில் மண்

உணவு, உரம் போன்றவற்றுக்கென ரூபா 4000 கோடி வீதம் மானியம் ஒதுக்கியுள்ள இந்திய வரவு செலவுத் திட்டம், அதன் மூலம் உதவி மானியம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகப் பொய்ப் பிரச்சாரம் செய்கின்றது. ''அதிகரித்ததாக'' மன்மோகன் சிங் செய்து கொண்டுள்ள பிரச்சாரம் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் கண்களில் மண்வீசுவதாகும். கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இவற்றுக்கென முறையே 5000, 3500 கோடி ரூபாக்கள் ஒதுக்கப்பட்டது. ஆனால் கடந்த ஆண்டில் இதைத் தாண்டும் விதத்தில் உணவு, உரம் பில் முறையே 5200, 4400 கோடியாக அதிகரித்தது. அந்த விதத்தில் இம்முறை இந்த உதவி மானியங்களில் பெரும் வெட்டு இடம் பெற்றுள்ளது என்பது தெளிவாகின்றது.

கிராமப்புற அபிவிருத்திக்கான ஒதுக்கீடுகள் நூற்றுக்கு 40 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மன்மோகன்சிங் இந்த வரவு செலவுத் திட்ட உரையில் கூறிக்கொண்டுள்ளபோதிலும் இவை ஏழை விவசாயிகள் உட்பட்ட கிராமப்புற ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக அன்றி, விவசாயத் துறையில் பிரமாண்டமான பங்கினை ட்ரான்ஸ் நஷனல் கம்பனிகளின் இலாப அவசியங்களின் பேரில் ஒதுக்குவதற்கான நிலைமைகளைச் சிருஷ்டிக்கவேயாகும்.

ஜப்பானின் சுசுகி மோட்டார் கம்பனி, இந்திய அரசுடமையான மாருதி கம்பனியின் 51% பங்குகளை கொள்முதல் செய்துள்ளது. பிர்லா குறூப்பைச் சேர்ந்த ஹிந்துஸ்தான் மோட்டார் கம்பனி அமெரிக்காவின்

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யப்பானுக்கு எதிரான கிளின்டனின் வர்த்தக யுத்தம் உக்கிரம்

'சுப்பர் 301' வர்த்தக யுத்தச் சட்டங்களைப் புதுப்பிக்கும் நிறைவேற்றுக் கட்டளைகளில் கைச்சாத்திட்டதன் மூலம் கிளின்டன் ஆட்சி, அமெரிக்காவுக்கும் யப்பானுக்கும் இடையேயான மோதுதல்களை உக்கிரமடையச் செய்துள்ளது. அமெரிக்காவுடனான வர்த்தகத்தில் யப்பானுக்குச் சாதகமாகவுள்ள 59 பில்லியன் டாலர் உபரியைக் குறைத்துக்கொள்ள வாஷிங்டன் கோரும் நடவடிக்கைகளை எடுக்காத பட்சத்தில் அமெரிக்கா வர்த்தகத் தடைகளைத் திணிக்கவுள்ளது.

டோக்கியோ அமெரிக்காவின் பொருட்களின் இறக்குமதிக்கென அதன் சந்தையை திறந்து விடுவதோடு மட்டுமன்றி, அமெரிக்க பொருட்களின் கொள்வனவுக் கோட்டாவையும் ஸ்தாபிதம் செய்யவேண்டும் என வாஷிங்டன் நெருக்கிக் கொண்டுள்ளது. அமெரிக்க நிர்வாகிகள் வாஷிங்டன் அமுல் செய்துள்ள நிதிக் கொள்கைகளுக்குச் சமமான கொள்கைகளையும் வரி வெட்டுக்கள், சமூக செலவினக் குறைப்பு - யப்பான் நடைமுறைக் கிட்டாக வேண்டும் என நெருக்குகின்றது. இந்த 'சுப்பர் 301', 1988ல் றீகன் நிர்வாகத்தினால் அமெரிக்க வர்த்தகப் போட்டியாளர்களுக்கு எதிராக அறிமுகம் செய்யப்பட்டது. இந்த ஒருதலைப்பட்சமான விதிகளின் கீழ் வாஷிங்டன் 'அநீதி'யான வர்த்தக நடைமுறைகளை இனங்காணும் எனவும் அதைத் தொடர்ந்து அமெரிக்க கம்பனிகள் விற்பனையில் இழந்த தொகைக்கு சமமானதை வரியாகத் திணிக்கும். இந்தச் சட்டம் J990ல் காலவதியாகியது. திரும்பவும் கிளின்டன் நிர்வாகம் இதற்குப் புத்துயிர் அளித்துள்ளமை அமெரிக்கா, யப்பான், ஐரோப்பாவுக்கிடையேயான சந்தைக்கான ஈவிரக்கமற்ற போட்டியின் அதிகரிப்பை சுட்டிக்காட்டுகின்றது.



பில் கிளின்டன்

இச் சட்டத்தின் சரத்தின் கீழ் இந்தத் தடைகள் உண்மையில் அமுல் செய்யப்பட ஒரு ஆண்டு எடுக்கும். இந்நிலையில் இவ்விதிகளுக்கு புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளமை யப்பானிய முதலாளித்துவத்துக்கு எதிரான பொருளாதாரப் பயமுறுத்தலாகவே அமைந்துள்ளது. யப்பானிய யென்னின் பெறுமானத்தை அதிகரிக்கச் செய்யும் அமெரிக்க ஆட்சியாளர்களின் பிரச்சாரம் உள்ளடங்கலான நேரடி விதிமுறைகள் ஏற்கனவே கையாளப்பட்டுள்ளன. இதன் மூலம் யப்பானிய ஏற்றுமதிகளின் பெறுமதியை அதிகரிக்கச் செய்யும் அதே வேளையில் 1930ன் பின்னர் யப்பான் கண்டிராத மோசமான பொருளாதார வீழ்ச்சியில் இருந்து தலையெடுக்கும் அதன் வல்லமையையும் அச்சுறுத்துகின்றது. இப்பிரச்சார இயக்கம் வட்டிவீதத்தினை அதிகரிக்கப் பங்களிப்புச் செய்துள்ளது. அத்தோடு உலகம் பூராவும் சமீப காலமாகப் பங்குமுதல் சந்தைகளை நெருக்கடி நெரித்துக் கொண்டுள்ளது.

இருபெரும் முதலாளித்துவ செல்வந்த நாடுகளுக்கிடையே வளர்ச்சி கண்டுள்ள மோதுதல்கள் வர்த்தக யுத்தத்தின் புதிய காலப்பகுதி உலகப் பொருளாதாரத்தினை இன்னும் ஆழமான நெருக்கடிக்குள் தள்ளப் போகின்றது என்ற பதட்டத்தினை அமெரிக்காவிலும் அனைத்துலகிலும் உள்ள ஆளும் வர்க்கப் பகுதியினரிடையே தூண்டிவிட்டுள்ளது.

வர்த்தக, வரி மீதான பொது உடன்படிக்கையின் (கட்) பணிப்பாளர் நாயகம் பீட்டர் சதர்லண்ட் அமெரிக்க நடவடிக்கைகளை 'தவறானதும் ஆபத்தானதும்' என கடுமையாகக் கண்டனம் செய்ததோடு, அவை உறுகுவேயில் 'கட்'டில் பேரம்பேசிய வர்த்தக உடன்படிக்கைகளை அச்சுறுத்துவதாக எச்சரிக்கை செய்துள்ளார். ''நாடுகளுக்கு இடையேயான வர்த்தகப் பதட்டங்கள் உறுகுவே சாதனைகளை முழுமையாக நடைமுறைக்கு இடுவதற்கு முன்னரே சோதனைக்கு உள்ளாக்குகின்றன'' என சதர்லண்ட் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானிய நிதி மூலதனத்தின் ஊதுகுழலான 'பினான்சியல் டைம்ஸ்' அமெரிக்க நடவடிக்கைகளை கண்டனம் செய்கையில் 'சட்டபூர்வமில்லாது கொலைத் தண்டனை வழங்கும் பாணியிலான சட்டங்கள் அனைத்துலக சட்டஆட்சியின் நன்மதிப்பைக் கெடுத்துவிடும் ஆபத்து ஏற்பட்டுள்ளது' என்றது. இதே பத்திரிகை தனது ஆசிரியத் தலையங்கத்தில் இந்த அமெரிக்க வர்த்தக சட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'இன்று அமெரிக்கா 'வழக்குத்தொடுநர், ஜூரர், நீதிபதி, கொலையிலிடுபவனாகச் செயற்படத் திடசங்கற்பம் பூண்டுள்ளது' என்றது.


இந்த ஐரோப்பிய விமர்சனங்களுக்குச் சவுக்கடி கொடுக்கும் விதத்தில் பேசிய அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதியான மைக்கி கன்டர் ''...விளையாட்டில் குதிக்காமல் புறத்தே நின்று கொண்டுள்ளவர்களின் விமர்சனங்களை நாம் எதிர்பார்க்கவில்லை.... எப்போது அமெரிக்கா பூகோள வளர்ச்சியில் முன் நிற்பதை ஊர்ஜிதம் செய்ய முயல்கின்றதோ அல்லது நாம் சந்தைகளை திறக்க முயற்சிக்கின்றோமோ அப்போது ஐரோப்பியர்கள் எமக்கு காவலாக வரலாம் என நினைக்கிறார்களே தவிர எம்முடன் நிற்பதாய் இல்லை. எப்போதும் அவர்களின் நலனின் பேரிலேயே செயற்படுவார்கள். அவர்கள் சந்தைகளை திறப்பது இல்லை. அவர்களின் இப்பழக்கம் நியாயப்படுத்தப்படுகின்றது.''

யப்பானுக்கு எதிராக அமெரிக்கா ஏற்கனவே தொடுத்துள்ள வர்த்தக யுத்தத்தினை ஐரோப்பாவுக்கு எதிராகவும் அமுல் செய்ய அது ஆயத்தமாகவுள்ளது என்பதற்கு இந்த வசை மாரி செய்தி நல்ல சான்று.

# ஐரோப்பிய தேர்தல்களில் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் தலையீடு

## பீ.எஸ்.ஏ. பேர்ளினில் பிரச்சாரம்

நான்காம் அகிலத்தின் ஐரோப்பியப் பகுதிகள் எதிர்வரும் ஐரோப்பியத் தேர்தல்களில் கூட்டாக பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளன. ஜேர்மனியில் பண்ட் சோசலிஸ்ட் ஆர்பைட்டரும் (BSA) பிரித்தானியாவில் இன்டர்நஷனல் கம்யூனிஸ்ட் கட்சியும் (lCP) வறுமைக்குள்ளும் வேலையின்மைக்குள்ளும் ஆயிரமாயிரம் தொழிலாளர்களை தள்ளிக் கொண்டுள்ள முதலாளித்துவ நெருக்கடிக்கு ஒரு சோசலிசப் பதிலை முன்வைக்கவுள்ளன. சகல வகையறாவைச் சேர்ந்த தேசிய சோவினிசங்களுக்கும் எதிராக இந்த ட்ரொட்ஸ்கிசக் கட்சிகள் ஐரோப்பிய, அனைத்துலகத்தொழிலாளர் வர்க்கத்தினை சோசலிச அனைத்துலகவாத வேலைத் திட்டத்தின் அடிப்படையில் ஐக்கியப்படுத்தவும், ஐரோப்பா பூராவும் நான்காம் அகிலத்தின் பகுதிகளை கட்டியெழுப்பவும் போராடும்.



லுட்விக் நீத்தம்மர்

இந்த தேர்தல்களில் BSA, 1CP இரண்டும் தலா மூன்று வேட்பாளர்களை நிறுத்தவுள்ளன. BSA தேர்தலில் நிற்கும் அந்தஸ்தினை பெறும் பொருட்டு ஜேர்மனி பூராவும் 4000 கையொப்பங்களை சேகரிக்கும் இயக்கத்தில் ஈடுபட்டுள்ளது. பேர்ளினில் இடம்பெற்ற இப்பிரச்சார இயக்கத்தில் பீ.எஸ்.ஏ. 430 கையெழுத்துக்களைத் திரட்டியதோடு 440 'நியூ ஆபைட்டர் பிரஸ்' பத்திரிகைகளையும் விற்பனை செய்தது. இந்தப் பிரச்சார இயக்கத்தின் போது பக்டரிகள், வேலையற்றோர் அலுவலகம், பேர்ளின் பல்கலைக் கழகங்கள் முதலான இடங்களில் மிகவும் உயிர்ப் புஷ்டியான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இக்கலந்துரையாடல்களின் போது மூன்று முக்கிய விவகாரங்கள் தலைதூக்கின: யூகோசலாவிய யுத்தமும் இனவாத, தேசியவாதப் போக்குக்களின் பெருக்கமும், தொழிற் சங்கங்களின் பாத்திரமும், சமூக ஜனநாயகக்கட்சியின் அரசியலும், மாஜிகிழக்குஜேர்மன் ஸ்டாலினிசக் கட்சி.

பல இளைஞர்களும் தொழிலாளர்களும் பீ எஸ்.ஏயின்தேர்தல் இயக்கத்துக்குஆதரவு வழங்கினர். கட்சி தனது பிரச்சாரத்தின் மையமாக முதலாளித்துவம், யுத்தம்,இனவாதத்துக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தை அனைத்துலகரீதியில் ஐக்கியப்படுத்துவதைக் கொண்டுள்ளது. இந்த ஆதரவுக்கு காரணம் கட்சி ஏற்கனவே தன்னை சமூக ஜனநாயகவாதிகள், PDS, தொழிற் சங்கங்களின் முதலாளித்துவச் சார்பு, தேசியவாதக் கொள்கைகளில் இருந்து தெளிவான முறையில் பிளவுபடுத்திக் கொண்டுள்ளதே.

ஐரோப்பியத் தேர்தலில் பீ.எஸ்.ஏ. சார்பில் போட்டியிடும் அதன் மத்திய குழு உறுப்பினரான லுட்விக் நீத்தம்மர் இந்த பேர்ளின் பிரச்சாரத்தில் கலந்து கொண்டார். இவர் கடந்த வருடம் மொட்டைத் தலை பாசிஸ்டுகள் நடாத்திய தாக்குதலின் போது கடும்காயமடைந்தவர். யூகோசலாவியா பற்றிய சூடான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. பொஸ்னியாவில் நேட்டோத் தலையீட்டுக்கு ஆதரவான வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் பிரச்சாரங்கள் பழைய தலைமுறையினர் இடையே தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தன. நியூ ஆர்பைட்டர் பிரசின் 'நேட்டோ விமானத் தாக்குதலை நிறுத்து!' என்ற தலையங்கத்தைப் பலர் தன்னியல்பாக ஆதரித்தனர். கடந்த உலக யுத்தமும், பேர்ளின் மீதான குண்டுவீச்சும் தமக்கு நினைவுக்கு வருவதாக அவர்கள் தெரிவித்தனர். யூகோசலாவியா ஏற்கனவே ஒரு உலக யுத்தத்திற்கான ஒரு தீப்பொறியாக இருந்துள்ளதாக அவர்கள் கூறினர்.


பொஸ்னியப் படுகொலைகளை நிறுத்த 'ஏதாவது' செய்யவேண்டும் என்பதன் அடிப்படையில் நேட்டோ தலையீட்டை நியாயப்படுத்தியவர்களும் இருக்கவே செய்தனர். பீ.எஸ்.ஏ. அங்கத்தவர்கள் நேட்டோவினதும், ஐ.நா.வினதும் தலையீடுகள் இரத்தக்களரியை நிறுத்துவதற்குப் பதிலாக அதை மேலும் பெருக்கெடுக்கச் செய்யும் என்பதைச் சுட்டிக்காட்டினர். யுத்தத்தினை நிறுத்தக்கூடிய ஒரே சக்தி தொழிலாளர் வர்க்கமே. அது ஒரு சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அனைத்துலக ரீதியில் ஐக்கியப்படுத்தப்பட வேண்டும். பீ.எஸ்.ஏ பிரச்சாரகர்களை மெர்சீட்ஸ் பக்டரிக்கு வெளியே சந்தித்த ஒரு யூகோசலாவிய தொழிலாளி இதை ஏற்றுக் கொண்டார். அவர் கூறியதாவது; ''ஐ.நா.வும் நேட்டோவும் சமாதானத்தைக் கொண்டுவராது. ஆரம்பத்திலிருந்தே அவர்கள் யுத்தத்தில் சம்பந்தப்பட்டிருந்ததோடு இதைத் தூண்டிவிட்டனர்'' என்றார். ஐரோப்பாவின் ஏனைய பாகங்களில் உள்ள தொழிலாளர்கள் யுத்தத்தை நிறுத்தச் செயற்படாதது ஏன் என்பதை அவரால் புரிந்து கொள்ளமுடியவில்லை.

இதற்கான முக்கிய பொறுப்பு, பொஸ்னியாவில் இராணுவத் தலையீட்டை ஆதரிக்கும் சமூக ஜனநாயகக் கட்சி, தொழிற்சங்கத் தலைவர்களைச் சார்ந்தது என லுட்விக் நீத்தம்மர் விளக்கினார். அவர்கள் 'ஜேர்மனியின் கைத்தொழில் அடிப்படையைக் காக்கும்' பேரில் தொழிலாளர்களின் சம்பளங்கள், தொழில்கள் மீது தாக்குதல் தொடுப்பதை ஆதரிக்கின்றனர். 'தொழிற் சங்கங்களின் தேசியவாதம் பற்றி நீங்கள் கூறுவது முற்றிலும் சரி' என ஒரு தொழிலாளி ஆத்திரத்துடன் கூறினார். ''ஐ.ஜி. மெட்டல், கூட்டங்களில் ஜேர்மனியில் சம்பளங்கள் பற்றி பெரும் கூச்சலிடு

( 9ம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சமர்' பத்திரிகையின் வேலை




## நூலாய்வு:

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளிநாட்டுக் கிளையின் ட்ரொட்ஸ்கிச சஞ்சிகையான 'மார்க்சிச முன்நோக்கு' இதழ்-2 வெளிவந்துள்ளது. 'இஸ்ரேல் பாலஸ்தீன விடுதலை இயக்க உடன்படிக்கை—தேசியவாதத்தின் முட்டுச்சந்தி', 'கிளாலியில் இராணுவ ஆக்கிரமிப்பின் தொடர்ச்சி என்ன?, 'சிந்தனை பத்திரிகையின் பப்லோவாத முகமூடி கிழிகின்றது,-(பகுதி-2) 'ஜேர்மனியில் இனவாத வளர்ச்சியும் தொழிலாள வர்க்கத்தின் படிப்பினைகளும், போன்ற ஆய்வுக் கட்டுரைகளை இச் சஞ்சிகை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் தேசிய இனத்தினரிடையே இன்றுள்ள நாற்றம்கண்ட குட்டி முதலாளித்துவ அரசியல் அமைப்புக்களுக்குப் பதிலாக ஒரு 'மூன்றாவது பாதைக்கான திட்டத்தை' முன்வைப்பதாகக் கூறிக்கொள்ளும் அரசியல் பத்திரிகைகளின் 'முன்நோக்கின்' சுயகோலத்தை இந்த 'மார்க்சிச முன்நோக்கில்' வெளியாகும் ''சமர் பத்திரிகையின் வேலைத்திட்டம்: ஒரு தேசியவாத தூக்குக்கயிறு'' என்ற ஆய்வுக் கட்டுரை உரிந்து காட்டுகின்றது. அதை இங்கு பிரசுரிப்பதில் 'தொழிலாளர் பாதை' பெருமகிழ்ச்சியடைகின்றது.

(ஆ—ர்)

பிரான்சின் தலைநகர் பாரிசிலிருந்து வெளிவரும் ''சமர்'' பத்திரிகை அதனது இதழ் 7 இலக்கமிடப்பட்ட வெளியீட்டில் ''மூன்றாவது பாதைக்கான திட்டம்'' என்ற தலைப்பில் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பான திட்டம் ஒன்றைப் பிரசுரித்திருக்கின்றது.

இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கம், தற்போதைய தேசிய விடுதலை இயக்கங்கள் என்று சொல்லப்படுபவையின் அரசியல் வங்குரோத்துக்குப் பதிலாக ஒரு புதிய தேசிய விடுதலை இயக்கம் ஒன்றினை உருவாக்குவதே. இது தனிய ''சமர்'' பத்திரிகையின் திட்டம் மட்டுமல்ல; வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடையே பிரசுரிக்கப்படும் அரசியல் பத்திரிகைகளின் அடிப்படை இலக்கும் ஆகும். கடந்த பத்து வருடகாலமாக தற்போது இயங்கும் இந்த இயக்கங்களின் அரசியலின் நேரடிப் பெறுபேறாக ஒரு முட்டுச்சந்திக்குள் தள்ளப்பட்டிருக்கும் தொழிலாளர்களும், ஒடுக்கப்பட்ட மக்களும் இந்தத் திட்டத்தின் அரசியல் அடித்தளத்தை விளங்கிக் கொள்வது அவசியமானது. இந்நிலைமைகளில் ஒரு புதிய இயக்கம் தேவையென்பதற்கு பழைய இயக்கங்களின் வங்குரோத்துக்கு என்ன காரணங்கள் வழிதிறந்தன என்பதை ஆய்வு செய்யவேண்டும்.

### தேசிய விடுதலை இயக்கங்களின் வங்குரோத்து

இது தனியே தற்போதைய தமிழ் இயக்கங்களுக்கு மட்டும் பிரத்தியேகமான ஒரு விசேட குணாம்சமல்ல. இரண்டாவது மகாயுத்தத்திற்கு பின்னர் உருவான அனைத்து விடுதலை இயக்கங்களும் சர்வதேசரீதியாக இன்று ஏகாதிபத்தியத்தின் நேரடிக் கைகூலிகளாக மாறியிருக்கும் நிகழ்வுப்போக்கின் ஒரு பகுதியாகும்.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யசீர் அரபாத் புரட்டாதி மாதம் 14ம் திகதி ''எனது வாழ்க்கையின் மகத்தான மணித்தியாலம் இதுதான்'' (டைவெல்ட் 14.10.93) என்று வாய் புலம்பியபடி வா. சிங்டனின் வெள்ளை மாளிகைக்குள் நுழைந்தது அவரது தனிமனித குணாம்சங்களினால் தீர்மானிக்கப்படவில்லை. பதிலாக சர்வதேச ரீதியாக ஏற்பட்ட புறநிலை மாற்றங்களினால் உருவாக்கப்பட்டது. இதே புறநிலையான மாற்றங்கள்தான் தமிழ் இயக்கங்களை அரசின் கைக்கூலிகளாக மாற்றியிருக்கின்றது.

தமிழ் தேசிய இயக்கங்களின் தலைவர்களினது ஜனநாயக மறுப்பு, உட்கட்சி ஜனநாயகமின்மை, ஏனைய இயக்கங்கள் மீது ''விடுதலைப்போர்'', மற்றும் ஏனைய ஊழல்கள் அனைத்தும் இவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் முதலாளித்துவ வேலைத்திட்டத்தின் பிரிக்க முடியாத பாகங்கள்.

இந்த நடவடிக்கைகளிலும் இவர்கள் சர்வதேச தேசியவாதிகளுக்கு ஒரு விதத்திலும் குறைந்தவர்களல்ல. இறுதி ஆய்வுகளில் இந்தக் குணாம்சங்கள் [illegible] களின் அரசியலைத் தீர்மானிக்கவில்லை. உலக முதலாளித்துவ நெருக்கடியின் நேரடி விளைவுகள்தான் இந்த இயக்கங்களின் தலைவிதியைத் தீர்மானிக்கின்றது.

இவர்களது அரசியலின் வர்க்கத் தன்மையை தோலுரித்துக்காட்டிய இந்திய-இலங்கை ஒப்பந்தம் வெறுமனே ராஜீவ் காந்தியின் தனிமனிதப் பண்புகளிலிருந்து உருவாகவில்லை. இவர் இந்தியாவின் பொருளாதாரத்தை உலக ஏகாதிபத்தியத்திற்கு திறந்துவிடுவதற்காக எடுத்த முயற்சிகளின் தவிர்க்கமுடியாத தேவை இந்த ஏகாதிபத்தியத் திட்டத்தை முன்வைத்தது. இலங்கை — இந்திய ஒப்பந்தத்தின் அனைத்து நிபந்தனைகளையும் மாற்றங்களின்றி ஏற்பதற்கு சில இயக்கங்கள் தயக்கம் காட்டியதும் இந்திய முதலாளித்துவம் இவர்களை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்ததையும் ஒப்பந்தத்திற்கு முந்திய சில நாட்கள் நினைவுபடுத்துகின்றன. இந்தத் தயக்கம் பற்றியும், அதனது பின்னணி என்ன என்பதையும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை பின்வருமாறு ஆய்வு செய்தது:-

''இந்திய சூழ்ச்சியினதும், மோசடியினதும் விளைவாகவே தாம் புதுடில்லிக்கு விமானத்தில் செல்லவும், இலங்கை-இந்திய உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு இணங்கவும் தீர்மானம் செய்ததாக பிரபாகரன் இன்று கூறுகின்றார். இந்தச் ''சாட்டு'' தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கத்தின் பலவீனமான தன்மையை மட்டுமன்றி, குட்டிமுதலாளித்துவ தேசியவாதத்தின் அரசியல் மலட்டுத்தனத்தையும் அம்பலப்படுத்துகின்றது. விடுதலைப் புலிகளின் தலைவர் காந்தியினால் ஏமாற்றப்பட்டிருப்பின் இதற்குக் காரணம், தமிழீழத்தின் சுயநிர்ணயத்தினை அடைவதில் அதன் முழுக்கொள்கையும் இந்திய முதலாளித்துவத்தின் உதவியை வேண்டுவதன் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட்டிருந்ததினால் ஆகும். இந்தப் பேராபத்து மிக்க தவறான கணிப்புக்கான மூலம் முதலாளித்துவ தேசியவாதத்தின் தவிர்க்க முடியாத வர்க்க முன்னோக்கும், வேலைத்திட்டமுமே ஆகும். 70 வருடங்களுக்கு முன்னர் லெனின் ஒரு ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் முதலாளி வர்க்கம் தனது சொந்த தேசிய சிறப்புரிமையை அடையவும், ''சுதந்திர'' நாட்டினுள் தொழிலாளர், விவசாயிகளைச் சுரண்டுவதற்கான சிறந்த நிலைமைகளை நிலைநாட்டும் நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே சுயநிர்ணயத்தினை கருக்கொள்கின்றது என எச்சரிக்கை செய்தார். இந்தச் சுயநலம், கூலியுழைப்பிலிருந்து உபரிப் பெறுமானத்தை பிடுங்கிக்கொள்கின்ற - அதாவது [illegible] - ஒரு வர்க்கம் என்ற முறையில் முதலாளி வர்க்கத்தின் தன்மையில் புறநிலையாக வேரூன்றி உள்ளது. இந்த வர்க்கப் புறநிலையானது முதலாளித்துவத் தேசியவாதிகளின் சகல கன்னைகளதும் - தமிழீழ விடுதலைப் புலிகள் போன்ற பெரிதும் தீவிரமான போக்குகள் உட்பட - கொள்கைகளை வழிநடாத்துவதோடு அவற்றின் அரசியல் உடல் அமைப்பையும் நிர்ணயம் செய்கின்றது.''

(இந்திய- இலங்கை ஒப்பந்தமும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும். புள்ளி 8— 19.11.1987)

இந்த இயக்கங்கள் அனைத்தினதும் வங்குரோத்தின் மத்திய புள்ளி இந்த முதலாளித்துவ வேலைத்திட்டம் ஆகும். இந்த சுயவிமர்சனங்களை மேற்கொண்டு இதே முதலாளித்துவ வேலைத் திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கும் ஒரு புதிய ''புனிதமான'' இயக்கத்தின் மூலம் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை வென்றுவிடலாம் என நினைப்பது ஒரு பிற்போக்கு கனவு.

இந்த அடித்தளத்திலிருந்து சமரினது வேலைத்திட்டத்தினை ஆய்வு செய்கையில் இது 1983ல் இயக்கங்களால் முன்வைக்கப்பட்டதை . விட வித்தியாசப்படுவது முஸ்லீம்களினதும், தோட்டத்தொழிலாளர்களினதும் ''சுயநிர்ணய உரிமை'' பற்றிய கேள்வியிலாகும். ஈரோசும், ஈபிஆர்எல்எப்பும் மலையகப் பகுதியைத் தங்களது தமிழீழத்தின் வரைபடத்தினுள் சேர்த்திருந்தனர்.

சமர் தோட்டத் தொழிலாளர்களுக்கு ''சொந்தப் பிரதேசங்களை'' நிர்ணயிப்பதோடு அவர்களிற்கு ''பூரண சுயாட்சி அதிகாரம்'' வழங்குகின்றது. அத்துடன் புதிதாக முஸ்லீம் மக்களிற்கான ''அரசியல் அதிகார அமைப்பு முறைகள் பூரண சுயாட்சி அதிகாரம் கொண்டவையாக அமைதல் வேண்டும். அவர்கள் ஐக்கியப்படுவதற்கு மேலாக அவர்களது இணைவு குறித்த முடிவு அவர்களது சுயநிர்ணய உரிமையாகும்'' என்கின்றது. (பக்கம் 7)

இரண்டு சந்தர்ப்பங்களிலும் இவர்கள் ''தமிழ் தேசிய இனத்தின் ஒரு பகுதியினரோ அல்லது அதற்கு கீழ்ப்பட்டவர்களோ அல்லர்'' என்பதன் மூலம் தமிழ் தேசிய இனத்தின் கலப்படமற்ற சுத்தமான தனித்துவத்தை வலியுறுத்துவதுடன், இந்தக் காரணத்தால் இவர்கள் பிரிந்து போவதைத் தவிர வேறு வழியில்லை என்பதன் மூலம் தீவின் அனைத்து மக்களிடமும் ஒரு ஐக்கியம் உருவாவதற்கு வெடிவைக்கின்றன. இதனால் இந்த வேலைத்திட்டம் சிங்கள இனவாத அரசின் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்கின்றது.

தோட்டத் தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் உடனடிப் பிரச்சனை தோட்டங்களை ஏகாதிபத்திய நிறுவனங்களிடம் கையளிக்கும் சிறீலங்கா அரசினைத் தூக்கியெறிவதற்கு தீவின் தொழிலாளருடன் ஒன்றிணைவதாகும். இலங்கைத் தொழிலாள வர்க்கத்தின் பிரிக்கமுடியாத படையணியாகிய இந்தத் தோட்டத் தொழிலாளர்கள் ''பூரண சுயாட்சி அதிகாரம்'' என்ற படுகுழிக்குள் விழுவதற்குப் பதிலாக தொண்டமானின் தொழிற்சங்க அதிகாரத்துவத்திலிருந்து உடைத்துக்கொண்டு சோசலிசப் புரட்சியை நோக்கி முன்னேறுவதைத் தங்களது வரலாற்றுப் பணியாக கொண்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் பேசும் முஸ்லீம்கள் முஸ்லீம் மதத்தினைப் பின்பற்றுவதைத் தவிர மொழியிலோ, கலாச்சாரத்திலோ தமிழ் தேசிய இனத்தின் ஒரு பிரிக்கமுடியாத பகுதியினர் ஆவர். இந்தப் பிரதேசங்களில் வாழும் ஏனைய மதங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் அதே இன ஒடுக்குமுறைக்கு முகம் கொடுக்கும் இவர்கள் கடந்த காலங்களில் இயக்கங்களின் போராளிகளாக [illegible]இனவாத இராணுவத்திற்கு [illegible]திராகப் போராடியும் இருக்கின்றார்கள். 1990ன் இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லீம் தமிழர்களை வடபகுதியிலிருந்து வெளியேற்றியதும் அத்துடன் தொடர்ந்த அவர்கள் மீதான படுகொலைகளும் தமிழ் மக்களை மதரீதியில் பிளவுபடுத்துவதையும், அதன் மூலம் இனவாத அரசுக்கு கைகொடுப்பதையும் நோக்கமாகக் கொண்டது. இது எந்தவகையிலும் ஏனைய மதங்களைச் சேர்ந்த தமிழ் தேசிய இனத்தின் தொழிலாளர்களினாலும், ஒடுக்கப்பட்ட மக்களினாலும் தங்கள் ச[illegible]தரர்களை தங்களுக்கு ''கீழ்ப்படுத்தும்'' நோக்கில் செய்யப்பட்டதில்லை. பதிலாக இந்து - முஸ்லீம் பிரிவினையின் மூலம் முதலாளித்துவ நலன்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டது.

முஸ்லீம் மக்களை தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கிலிருந்து வெளியேற்றுகையில் இவர்களுக்கு ''எதிரான'' இயக்கங்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் காங்கிரஸ் என்பவை ஐந்து முதலாளித்துவ முஸ்லீம் அமைப்புக்களுடன் ''முஸ்லீம் பிராந்திய ஆட்சி'' என்ற வேலைத்திட்டத்தினை முன்வைத்தன. இது இந்து - முஸ்லீம் பிரிவினையை வளர்ப்பதன் மூலம் அன்றைய பிரேமதாச அரசினை பாதுகாக்கும் திட்டமாக இருந்தது.

''சமர்'' பத்திரிகையின் தற்போதைய ''பூரண சுயாட்சி அதிகார'' திட்டத்தின் உள்ளடக்கம் LTTE யினது வேலைத்திட்டத்தை தொடர்ச்சியாக நிறைவேற்றும் நோக்கத்தில் வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்களுக்கு ஒரு பிரதேசத்தை தெரிவு செய்யும் திசையில் இருக்கின்றது. முஸ்லீம் தமிழர்களது பிரச்சினைகளை மத அடிப்படையில் உருவாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லத்திட்டம்: ஒரு தேசியவாத தூக்குக்கயிறு

முஸ்லீம் அமைப்புக்களோ அல்லது ''பூரண சுயாட்சி அதிகாரமோ'' தீர்த்து வைக்கப்போவதில்லை. இது முதலாளித்துவ நலன்களுக்கு தமிழினத்தின் ஒரு பகுதியினராகிய இவர்களை பகடைக்காய்களாக பாவிப்பதற்கே சேவைசெய்யும் இந்த வேலைத்திட்டங்களை நிராகரிப்பதுவும், தொழிலாளர் வர்க்க வேலைத்திட்டத்தில் ஒன்றிணைவதுமே இவர்களுக்கான ஒரே வழியாகும்.

## சுயநிர்ணய உரிமை

தமிழ், சிங்கள, முஸ்லீம், மலையக இலங்கைத் தீவின் மக்களுக்கு பிரிவினை வேலைத்திட்டத்தினை முன்வைப்பதற்கும், சுயநிர்ணய உரிமைக்கும் ஒருவித தொடர்பும் இல்லை. சுயநிர்ணய உரிமையின் பெயரால் இன்று உலகம் முழுமையும் வெடித்துக் கிழம்பும் இன, மத, பிரதேச வேறுபாடுகளை தங்களுடைய நலன்களுக்கு சாதகமாக ஏகாதிபத்திய சக்திகள் பாவிப்பதனை காணமுடியும். அதே வேளையில் இதனது பெயரால் நானாவித இன, மதக் குழுக்களைச் சேர்ந்த வலதுசாரிப் போக்குகள் தங்களது சொந்த நாடுகள், அல்லது பிரதேசங்கள் தேவையென குரல் கொடுக்கின்றன.

1991 மார்கழி மாதத்தில் முன்னாள் யூகோசலாவியாவில் குரோசியாவையும், சுலோவேனியாவையும் சுயநிர்ணய உரிமையின் பெயரில்தான் ஜேர்மன் ஏகாதிபத்தியம் ''சுதந்திரநாடுகளாக'' அங்கீகரித்தது. இது இந்த நாடுகளின் பல இன, மத மக்களுக்கு சுதந்திரத்தை வழங்கவில்லை. பதிலாக ஒருவரை ஒருவர் கொன்றொழிக்கும் ''சகோதர யுத்தத்தினை'' இன்னும் தீவிரமாக்கியது. இதே பாணியில்தான் முன்னாள் சோவியத் யூனியனின் கலைப்பிற்கு பின்பு உருவாகிய நாடுகளின் இன, மத, மொழி முரண்பாடுகளில் ஏகாதிபத்தியத்தின் நேரடித் தலையீடு ஆர்மேனிய, அசர்பாச்சான், ஜோர்ஜியா மற்றும் இன்னும் பல நாடுகளில் உள்நாட்டு யுத்தத்திற்கு வழிவகுத்துள்ளது. காளான் முளைப்பதுபோல் தினசரி சர்வதேச ரீதியாக பிரகடனப்படுத்தப்படும் பிரிவினை இயக்கங்கள், புதிய தேசிய அரசுகளின் நிர்மாணத்தினை சுட்டிக்காட்டவில்லை. மாறாக தற்போது நீண்ட காலமாக இருந்து வந்த தேசிய அரசுகளின் உடைவினை வெளிப்படுத்துகின்றது.

பிரித்தானியருக்கு எதிரான இந்திய சுதந்திரப்போர் இந்தியாவின் 500 க்கும் மேற்பட்ட சிற்றரசுகளின் மக்களை இன, மத, மொழி எல்லைகளைக் கடந்து இணைப்பதன் மூலம் இந்திய உபகண்டத்தின் ஐக்கியத்திற்காகவும் சமூக, பொருளாதார, கலாச்சார வளர்ச்சிக்கும் பங்களிப்பதாகவிருந்தது. காங்கிரஸ் கட்சியின் வேலைத்திட்டம் பாகிஸ்தானைப் பிரிப்பதுடன் இந்திய உபகண்டத்தினை முதலாளித்துவ தேசியவாதத்தினால் கட்டியெழுப்புவதற்கு சத்தியம் செய்தது. இன்று இந்தியா முழுமையும் வெடித்துக் கிழம்பும் பிரிவினை இயக்கங்கள் இந்த முதலாளித்துவ தேசியவாதத்தின் நாற்றமெடுத்த பிணத்திலிருந்துதான் உருவாகின்றன. இது உண்மையான தேசிய ஐக்கியத்தினையும் ஏகாதிபத்தியத்திற்கெதிரான யுத்தத்தினையும் மேற்கொள்வதற்கு முடியாத இந்திய தேசியவாதத்தின் பிற்போக்குத் தன்மையையும் நிரூபித்துக் காட்டுகின்றது.

இந்த நிலைமைகளில் இன்று இந்தியாவில் தோன்றியிருக்கும் பிரிவினை இயக்கங்கள் இந்திய தேசிய முதலாளித்துவத்தால் இன,மத, மொழி பிரிவினைக்குட்பட்டிருக்கும் மக்களின் உண்மையான அபிலாசைகளை நிறைவுசெய்யவோ அல்லது அவர்களை ஐக்கியப்படுத்தவோ எந்தவிதத்திலும் இலாயக்கற்றவையாகும். ஏகாதிபத்தியங்களின் நேரடிக்கட்டுப்பாட்டில் இந்தப் பிரிவினை இயக்கங்களில் பல ஏற்கனவே வந்துவிட்டதென்பதுடன் இவர்களின் வேலைத்திட்டம் ஏகாதிபத்தியத்திற்கு தங்கள் ''பிரதேசங்களை'' திறந்து விடுவதினையே மையமாக கொண்டுள்ளது.

தமிழ் தேசிய விடுதலை இயக்கங்களைப் பொறுத்தவரையிலும் வேறுவிதமான விதிவிலக்கு இல்லை. பழைய இயக்கங்களின் வங்குரோத்து புதிதாக முற்போக்கான இயக்கங்களை தோற்றுவிப்பதற்கான காலப்பகுதியைத் திறந்துவிடவில்லை. தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய இயக்கங்கள் ஆரம்பத்திலிருந்தே தமிழ் தொழிலாளர்களினதும், ஒடுக்கப்பட்ட மக்களினதும் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதை மையமாகக் கொண்டிருக்கவில்லை. இவர்களது அடிப்படை நோக்கம், தமிழ் முதலாளித்துவத்தின் நலன்களை பேணுவதற்காக சிங்கள முதலாளித்துவத்திற்கு அழுத்தம் கொடுப்பதாகவே இருந்தது. இந்த தேசிய இயக்கங்களின் இடிபாடுகளில் இருந்து தோன்றும் ஒரு புதிய தேசிய இயக்கம் - அதை உருவாக்க விரும்புவோரது நல்லெண்ணங்கள் எதுவாயிருப்பினும்— உள்ளடக்கத்தில் ஏகாதிபத்தியத்தின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரிவினை இயக்கங்களிலிருந்து ஒரு விதத்திலும் வேறுபடவில்லை.

## பிரிவினை இயக்கங்களின் தோற்றத்தின் பின்னணி

சர்வதேச மயமாக்கப்பட்ட உற்பத்திக்கும் பல் தேசிய நிறுவனங்களினால் கட்டுப்படுத்தப்படும் உலகப் பொருளாதாரத்திற்கும், முதலாளித்துவம் வரலாற்றுரீதியாக தங்கியிருக்கும் தேசிய அரசு முறைக்கும் உள்ள சமரசம் செய்யமுடியாத முரண்பாடுகளின் கூர்மையடையும் தன்மை தேசிய அரசுகளின் உடைவிற்கு கொண்டு செல்கின்றது. இதன் நேரடி விளைவுகளே இந்தப் பிரிவினை இயக்கங்களின் தோற்றமாகும். இது தனியே முன்னாள் யூகோசலாவியாவிற்கும் சோவியத் யூனியனுக்கும், இந்தியா, இலங்கை போன்ற பின்தங்கிய நாடுகளுக்கும் மட்டும் பிரத்தியேகமான ஒரு வளர்ச்சிப் போக்கல்ல. இத்தாலியை வடக்கு, தெற்கு என்று பிரிப்பதற்கும் இங்கிலாந்தில் 1745ல் இங்கிலாந்துடன் இணைக்கப்பட்ட ஸ்கொட்லாந்தைப் பிரிப்பதற்கும் பெல்ஜியத்தில் பிளமன், வாலுனன் என்ற பிரிவினை கோசத்திற்கும் அடிப்படைக் காரணம் உலகரீதியாக வளர்ச்சியடைந்த பொருளாதார அழுத்தங்களின் வெளிப்பாடேயாகும்.

இது 19ம் நூற்றாண்டின் முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்காலத்தில் உருவான தேசிய இயக்கங்கள் கொண்டிருந்த முற்போக்கான இன, மத, மொழி பேதமற்ற தேசிய அரசுகளை உருவாக்கும் குணாம்சத்தை கொண்டிருக்கவில்லை. இதற்கு நேரெதிராக ஏகாதிபத்திய சகாப்தத்தில் முதலாளித்துவத்தினால் உலகரீதியாக அனைத்து மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய முறையில் உலகப் பொருளாதாரத்தையும், உற்பத்தி சக்திகளையும் ஒழுங்குபடுத்த முடியாததின் நேரடி விளைவாகும்.

ஏகாதிபத்தியங்கள் பல்தேசிய நிறுவனங்களின் வர்த்தகப் போட்டிக்கான மூலப் பொருட்களையும், மலிந்த கூலியுழைப்பையும் பெற்றுக்கொள்வதற்கான உலகின் மிகவும் சாதகமான ''பிரதேசங்களை'' தேர்ந்தெடுப்பதற்கு முயல்கின்றன. இந்தப் பிரிவினை இயக்கங்கள் இந்தத் தேவையினை நிறைவேற்றும் கருவிகளாகத் தொழிற்படுகின்றன. தேசிய அரசுகளுக்கு பதிலாக பொருளாதாரரீதியில் சாதகமான பிரதேசங்களைப் பிரிப்பது தொடர்பாகவும், ஒவ்வொரு நாட்டினதும் வளமான பகுதிகளை தேர்ந்தெடுத்து இணைப்பதன் மூலம் ''பிராந்திய நாடுகளை'' உருவாக்குவது தொடர்பாகவும், ''பிராந்திய நாட்டின் எழுச்சி'' என்ற தலைப்பில் கெனிச்சி ஓமாய் என்ற முதலாளித்துவ பொருளாதார நிபுனர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: ''பிராந்திய நாடுகள்'' இயற்கையான பொருளாதார பிரதேசங்கள். அவைகள் ஒரு குறிப்பிட்ட நாட்டின் பூகோள எல்லைக்குள் இருக்கும்; அல்லது இல்லாதிருக்கும். அவை அப்படி இருந்தால் அது வரலாற்று விபத்தாகும் சில சந்தர்ப்பங்களில் தனித்துவமான இந்தப் பொருளாதார அலகுகள் வடக்கு இத்தாலி, வேல்ஸ், கற்றலோனியா, அல்சாச லோறெய்ன், அல்லது பாடன்வூட்டம்பேர்க் போன்ற பகுதிகளாக தாய் நாடுகளிலிருந்து பிரிந்திருக்கும். வேறு சந்தர்ப்பங்களில் தேசிய எல்லைகளைக் கடந்து இணைந்திருக்கும் சந்தியாகோ, ரியூயானா, போலவும் கொங்கொங், தெற்குச்சீனா போலவும் பொருளாதார வடிவங்களை எடுக்கும். அல்லாவிடில் ''வளர்ச்சி முக்கோணமாகிய'' சிங்கப்பூரையும், அதனது அயலில் இருக்கும் இந்தோனேசியத் தீவுகளைப் போலவும் இருக்கும். இன்றைய எல்லைகளற்ற உலகில் இவை இயற்கையான பொருளாதார பிரதேசங்கள். இங்கே என்ன முக்கியமெனில் ஏதோ ஒருவகையில் ஒன்றுடன் ஒன்றை இணைக்கையில் உலகப் பொருளாதாரத்தில் வெற்றிகரமாகப் பங்கெடுப்பதற்கான முக்கியமான கலவையை இவை சொந்தமாகக் கொண்டிருக்கின்றன. ('Foreign affairs', ஸ்பிரிங் 1993, பக்கம் 79).

இந்த நிலைமைகளில் தனிநாடுகளைக் கோரும் தேசிய முதலாளித்துவ, குட்டிமுதலாளித்துவ போக்குகள் ஏகாதிபத்தியத்தின் இரும்புப்பிடிக்குள் இருந்து விடுபட்டு, சுயாதீனமான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது பற்றி கதைப்பது தொழிலாளர் வர்க்கத்தையும், ஒடுக்கப்பட்ட மக்களையும் ஏமாற்றுவதற்கான திட்டமிட்ட சதியாகும். இவர்கள் உருவாக்கும் நாடுகளில் ஏகாதிபத்தியச் சுரண்டலைப் பாதுகாக்கும் விசேட சர்வாதிகார ஆட்சிகளையே மக்களுக்கு வழங்குவதற்கான தயாரிப்புக்களை மேற்கொள்கின்றனர்.

## முதலாளித்துவ வேலைத்திட்டம்

அனைத்துப் ''பழைய'' இயக்கங்களின் தலைமைகளும் தாங்கள் போட்டுக்கொண்ட கோமாளித்தனமான இடதுசாரி வினோத உடைகளினால் ஒன்றைமட்டும் ஒருபோதும் மறைக்கவில்லை. இவர்கள் நிர்வாணமாகக் காட்டியது தமிழ் முதலாளித்துவத்தின் நலன்களுக்கு கீழ்ப்படிந்ததே இவர்களது வேலைத்திட்டமும், இயக்கமும் என்பதனையே. இவர்களது பழைய கொள்கை விளக்கப் புத்தகத்திலிருந்து தேடியெடுத்து சமர் மிகவும் விசுவாசமாக பின்வருமாறு எழுதுகின்றது:- ''தமிழ் தேசிய இனத்தின் அனைத்து ஒடுக்கப்பட்ட வர்க்கமும் இணைந்து அவற்றிற்கிடையேயான முரண்பாட்டை தேசிய முரண்பாட்டிற்குள் கீழ்ப்படுத்தி, சிநேகபூர்வமான வழிகளில் கையாளுதல்.'' (இதழ் 7, பக்கம் 6)

உணர்மையுள்ள தமிழ்தொழிலாளர்களுக்கும், இளைஞர்களுக்கும் இந்த வடிவத்திலோ அல்லது சில சிறிய மாற்றங்களுடனோ இயக்கங்களின் வேலைத்திட்ட, கொள்கை விளக்கப் புத்தகங்களில் ஏற்கனவே வாசித்தது ஞாபகத்திற்கு வரலாம். இந்த வகையில் மட்டுமல்ல, வரலாற்று ரீதியாகவும் இந்த வேலைத்திட்டம் மிகப்பழையது. ரஷ்யப் புரட்சியில் மென்சிவிக்குகள் முன்வைத்த இரண்டு கட்டப் புரட்சியின் ஒரு தோற்றம்.

தொழிலாளர் வர்க்கத்துக்கு தேசிய முரண்பாடு கிடையாது. அது தேசங்களின் எல்லையைக் கடந்து சர்வதேச ரீதியாக புறநிலையாக ஐக்கியப்பட்டிருக்கும் ஒரே ஒரு வர்க்கம். தொழிலாளர் வர்க்கத்திற்கும், ஏனைய வர்க்கங்களுக்கும் இடையில் இருக்கும் முரண்பாடுகள் வர்க்கப் போராட்டத்தில் தொழிலாளவர்க்கத்தின் தலைமையை நிலைநாட்டுவதன் மூலமும் முதலாளித்துவ வர்க்கத்தின் மீது தொழிலாளர் வர்க்கத்தின் சர்வாதிகாரத்தினை உருவாக்குவதன் மூலம் மட்டுமே தீர்த்து வைக்கப்படும். எந்த நிலைமைகளிலும் தொழிலாளர் வர்க்கத்தின் வேலைத்திட்டத்தின் அச்சாணி, அதனது வர்க்க சுயாதீனத்தைப் பாதுகாப்பதாகத்தான் இருக்க முடியும்.

இங்கே தான் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஏன் முட்டுச்சந்திக்கு வந்தது என்ற கேள்விக்கான விடை இருக்கின்றது. இந்தப் போராட்டம் தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் இல்லாததின் நேரடி விளைவே ஒடுக்கப்பட்ட மக்களின் உண்மையான அத்தியாவசியமான, ஜனநாயகக் கோரிக்கைகளுக்குப் பதிலாக இன்று அவர்கள் தமிழ் முதலாளித்துவத்தின் சர்வாதிகாரத்திற்கும் பல்தேசிய நிறுவனங்களது சுரண்டலுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலைமை உருவாகியிருக்கின்றது. தமிழ் மக்களின் இந்த நிலைமை இந் நூற்றாண்டின் ஏகாதிபத்திய சகாப்தத்தில் பின்தங்கிய நாடுகளில் ஜனநாயகப் புரட்சியின் தலைவனாக யார் இருப்பது என்ற மிகவும் தீர்க்கமான பிரச்சினையின் மிகவும் கசப்பான அனுபவமாகும். தமிழ் ஒடுக்கப்பட்ட மக்களோ அல்லது ஆசிய, ஆபிரிக்க, லத்தின்-அமெரிக்க கண்டங்களில் வாழும் லட்சக்கணக்கான மக்களோ இந்தப் பிரச்சினைக்கான தீர்வினை ரஷ்யப் புரட்சியின் அனுபவங்களுக்கு வெளியிலிருந்து பெற்றுவிட முடியாது.

ரஷ்யப் புரட்சியில் மென்சிவிக்குகளது வேலைத்திட்டம் வரப்போகும் புரட்சி முதலாளித்துவத்தை ஆட்சியிலமர்த்தும்— ஒரு முதலாளித்துவக் குடியரசை உருவாக்கும் என்றதிலிருந்து ஆரம்பித்தது முதலாளித்துவ ஜனநாயகத்தின் ஒரு நீண்ட காலப்பகுதியினூடு தொழிலாளர் வர்க்கம் தனது சுயமான போராட்டங்களினால் சோசலிசப் புரட்சியை நோக்கி முன்னேறும் என்ற முடிவிற்கும் வந்தது. எனவே வரப்போகும் புரட்சியில் தொழிலாளர் வர்க்கம், முதலாளித்துவ வர்க்கத்தினரின் பிரிவுகளுடன் ஒரு அரசியல் கூட்டுக்கு போவதுடன் அதனது தலைவனாக முத

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சமர்' பத்திரிகையின் வேலைத்திட்டம்: ஒரு தேசியவாத...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

லாளித்துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியது. லெனினதும், ட்ரொட்ஸ்கியினதும் வேலைத்திட்டம் இதனை முழுமையாக நிராகரித்ததுடன் தொழிலாள வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்தை நிலைநாட்டுவதை மையமாகக் கொண்டிருந்தது. ரஷ்ய முதலாளித்துவத்தின் பிற்போக்குத் தன்மையும், தொழிலாள வர்க்கத்தின் மீதுள்ள அதனது பகையுணர்ச்சியும், பயமும் அதனை ரஷ்யாவின் ஜனநாயகப் புரட்சியின் பணிகளான நிலப்பிரபுத்துவத்தின் எச்சசொச்சங்களை அழித்தொழிப்பதற்கு லாயக்கற்றதாக்கியிருக்கின்றது. ரஷ்யாவின் பெரும்பான்மையான ஏழை விவசாயிகளின் அரசியல் பாத்திரம் எவ்வளவுதான் முக்கியமாக இருந்தாலும் அவர்களால் இன்னொரு வர்க்கத்தின் முன்னோக்குக்குள் மட்டும்தான் இயங்கமுடியும். எனவே ரஷ்யாவில் ஜனநாயகப் புரட்சியின் தலைமை, தொழிலாள வர்க்கத்தின் தோள்களில்தான் சுமத்தப்பட்டிருக்கின்றது. தனது தலைமையின் கீழ் விவசாயிகளை அணிதிரட்டிய தொழிலாள வர்க்கம் பாட்டாளி வர்க்க சர்வதிகாரத்தை நிர்மாணிப்பதன் மூலம்தான் ஜனநாயகப் புரட்சியினை நிறைவுசெய்ய முடியும். இந்த ஜனநாயகப் புரட்சியை வெற்றிகரமாக்குவதற்கான முன்நிபந்தனைகள் முதலாளித்துவ சொத்துடமை முறைகளை இல்லாதொழிப்பதில் தங்கியிருக்கின்றது. இதனால் இந்த ஜனநாயகப் புரட்சியானது ஒரு சோசலிச குணாம்சத்திற்கு வெளிப்படையாக மாற்றமடைகின்றது.

இந்த முன்னோக்குத்தான் போல்ஷிவிக் புரட்சியினை வெற்றிக்கிட்டுச் சென்றதுடன் உலகின் மிகப்பின்தங்கிய ரஷ்யாவில் பல்வேறுபட்ட தேசியஇனங்களின் ஐக்கியத்திற்கும், சோசலிச சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கான மூலைக்கல்லாகவும் இருந்தது.

## பின்தங்கிய நாடுகளின் தேசிய முதலாளித்துவத்தின் தன்மை

''சமர்'' தற்போது முன்வைக்கும் இந்த அனைத்து வர்க்கக்கூட்டு, போல்ஷிவிக்குகளினது வேலைத்திட்டத்தினை குழிதோண்டிப் புதைத்து, மென்சிவிக் வேலைத்திட்டத்திற்கு உயிரூட்டிய ஸ்டாலின், புகாரின் ஆகியோரது சித்தாந்த ஆயுதக்கிடங்கிலிருந்து பெறப்பட்டதாகும். 1928ல் சீனப்புரட்சியின் தோல்விகளின் மத்தியில் மூன்றாவது அகிலத்தின் ஆறாவது காங்கிரஸ் ஸ்டாலின், புகாரினால் எழுதப்பட்ட வேலைத்திட்டத்தை நிறைவேற்றியது. இந்த வேலைத்திட்டம், போல்ஷிவிக்குகளது உலகப் புரட்சி முன்னோக்கினை முழுமையாக நிராகரித்தது. காலனித்துவ முதலாளித்துவத்தின் முன்னால் தொழிலாள வர்க்கத்தை நிராயுதபாணியாக்கும் நோக்கில் ''காலனித்துவ நாடுகளின் முதலாளித்துவத்துடன் தற்காலிகமான உடன்பாடுகள் தொழிலாள, விவசாயிகளின் புரட்சிகர இயக்கங்களுக்கு அது தடையாக இல்லாமல் ஏகாதிபத்தியத்திற்கெதிரான உண்மையான போராட்டத்தை அது நடாத்துமட்டும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது.'' என இந்த வேலைத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. (லெனினிற்குப் பின்பு மூன்றாம் அகிலம், பக்கம் 127. ஆங்கிலப் பதிப்பு, நியூ பார்க் பப்லிகேசன்ஸ், லண்டன்) இது தனியே சீனப் புரட்சியினை மட்டுமல்ல, அதன் பின்னர் காலனித்துவ நாடுகளில் தோன்றிய அனைத்துப் புரட்சிகர எழுச்சிகளிலும் தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனத்தினை கழுத்தறுத்ததோடு தேசிய முதலாளித்துவத்திற்கு அடிபணியப்பண்ணுவதற்குமாகத் தயாரிக்கப்பட்டது.

ட்ரொட்ஸ்கி ''ஏகாதிபத்தியத்திற்கெதிரான உண்மையான போராட்டத்தை'' செய்வதற்கு காலனித்துவ நாடுகளின் தேசிய முதலாளித்துவத்திற்கு சக்தியிருக்கின்றது என்று சொல்வது, மென்சுவிக்குகளின் வேலைத்திட்டத்திற்கு திரும்பிப்போவதாகும் என வாதிட்டார். நிலப்பிரபுத்துவம் ஸார் மன்னனது அடக்குமுறை ஆகியவற்றிலிருந்து ரஷ்ய முதலாளித்துவத்திற்கு புரட்சிகர குணாம்சம் உருவாகும் என்பதே மென்ஷிவிக்குகளது வாதம். இதே அடித்தளத்தில் காலனித்துவ அடக்குமுறை தேசிய முதலாளித்துவதிற்கு புரட்சிகர குணாம்சத்தை வழங்கும் என ஸ்டாலின், புகாரினால் முன்வைக்கப்பட்டதை நிராகரித்த ட்ரொட்ஸ்கி, தேசிய முதலாளித்துவத்தின் வேலைத்திட்டத்தை தீர்மானிப்பது:-

''முதலாளித்துவத்தின் கொள்கையின் தன்மை தொடர்பான கேள்விகள் புரட்சிகரப் போராட்டத்தை நடாத்தும் தேசத்தினது முழுமையான உள்ளார்ந்த வர்க்க உறவுகள் 'எந்த வரலாற்றுக் கட்டத்தில் இந்தப் போராட்டம் உருவாகின்றது. தேசிய முதலாளித்துவம் முழுமையாகவோ, அல்லது பகுதியாகவோ எந்த மட்டத்திற்கு அரசியல், பொருளாதார இராணுவரீதியில் உலக ஏகாதிபத்தியத்தில் தங்கியிருக்கின்றது, இறுதியாகவும் மிக முக்கியமாகவும் எந்த மட்டத்திற்கு உள்நாட்டுத் தொழிலாள வர்க்கம் வர்க்கரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. அத்துடன் அதற்கு சர்வதேச புரட்சிகர இயக்கங்களுடன் என்ன தொடர்புகள் இருக்கின்றது என்பதினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது.

''ஒரு ஜனநாய[illegible] தேசிய விடுதலை [illegible] முதலாளித்துவத்திற்கு சுரண்டலை தீவிரப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுக்கும். புரட்சிகர அபிவிருத்திகளுக்குள் தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான தலையீடு முதலாளித்துவத்தின் முழுமையான சுரண்டலை முடிவுக்கு கொண்டுவரும் பயமுறுத்தலை அதற்கு விளக்குகின்றது.'' (லெனினிற்குப் பின்பு மூன்றாம் அகிலம், பக்கம் 131)

தேசிய முதலாளித்துவம் பற்றிய 1928ன் இந்த மதிப்பீட்டின் சரியான தன்மை இன்று 65 வருடங்களுக்குப் பின்னர் ஏகாதிபத்தியத்தின் மரணநெருக்கடி நிலைமைகளில் -உலகின் மூலைமுடுக்கெல்லாம்- உலகப் பொருளாதாரத்தின் கட்டுப்பாட்டினுள் வந்துவிட்ட நிலையில் முழுமையாக நிரூபித்துக்காட்டப்படுகின்றது.

''ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டம்'' என்ற சொல்லை சம்பிரதாயத்திற்குத் தன்னும் உச்சரிப்பதை நிராகரிக்கும் தேசிய முதலாளித்துவம் ஜனநாயகப் புரட்சியில் தொழிலாள வர்க்கத்தின் குரல்வளையை நசுக்கும் சக்திகளாக உருமாறியிருக்கின்றது. பலஸ்தீன விடுதலை இயக்கமும், ஆபிரிக்க தேசிய காங்கிரசும், சன்டினிஸ்டாக்களும், தமிழ் தேசிய விடுதலை இயக்கங்களும் தவிர்க்கமுடியாதபடி ஏகாதிபத்தியத்தின் தேவைகளுக்கு சுதந்திர வர்த்தக வலயத்தினை உருவாக்க தயாராகவிருப்பதன் வரலாற்று அடித்தளம் இவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த முதலாளித்துவ வேலைத்திட்டத்தில்தான் இருக்கிறது'

### சோசலிசப் புரட்சி வேலைத் திட்டம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் வேலைத்திட்டத்திற்கும், அதற்கு எதிரான ஏனைய அனைத்து இயக்கங்களுக்குமிடையில் மூலோபாயரீதியில் சீனப் பெருஞ்சுவர் இல்லை. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஏனைய இயக்கங்கள் விடுதலைப் புலிகளுக்கு முடிவுகட்டுவதால் முதலாளித்துவத்தை பாதுகாக்கலாம் என இனவாத அரசுக்கு சத்தியம் செய்து கொடுக்கையில், LTTE தமிழ் பிரதேசங்களை தனது கையில் ஒப்படைப்பதால் முதலாளித்துவத்தைப் பாதுகாப்பதற்கான நிலைமைகளை உருவாக்குவது தொடர்பாக வாக்குறுதியளிக்கின்றது. இறுதியில் இவர்கள் அனைவரும் பின்பற்றுவது ஒரே பாதையாகும். அது இலங்கைத்தீவில் முதலாளித்துவத்தைப் பாதுகாப்பது என்பதே.

'சமர்' வைத்திருக்கும் ''மூன்றாவது பாதை'' அடித்தளத்தில் தற்போதைய இயக்கங்களின் ஒரே ஒரு பாதையான முதலாளித்துவ பாதுகாப்பு என்பதிலிருந்து அடித்தளத்திலிருந்து ஒருபோதும் வேறுபடவில்லை. இந்த ''மூன்றாவது பாதை'' என்ற தேசியவாத இயக்கம் ஒன்றை உருவாக்கும் பிற்போக்கு வேலைத் திட்டத்தினை தொழிலாளர்களும், ஒடுக்கப்பட்ட மக்களும் முழுமையாக நிராகரிக்க வேண்டும்.

தமிழ் தொழிலாளர்கள், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு முன்னால் இருக்கும் ஒரே ஒரு வழி தீவின் தொழிலாள வர்க்க ஐக்கியத்திற்காகப்போராடுவதாகும். இலங்கைத் தீவில் சோசலிசப் புரட்சியின் கட்சியாக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவை கட்டியெழுப்புவதும் ''தமிழீழ – சிறீலங்கா [சோசலிசக் குடியரசை'' உருவாக்குவதற்கு போராடுவதுமே இன்றைய முட்டுச்சந்தியிலிருந்து வெளியேறுவதற்கான ஒரே ஒரு பாதையாகும்.

சோசலிச புரட்சியின் உலகக் கட்சியைக் கட்டி எழுப்பு!

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்!**

பெயர் ........................................................

முகவரி: ........................................................

........................................................

........................................................

தொலைபேசி இலக்கம்: ..............................

இப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்,
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
இல: 90, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு - 10.

**'தொழிலாளர் பாதை' சந்தாதாரர் ஆகுங்கள்**

அஞ்சல் கட்டணம் உட்பட சந்தா விபரம்

1 மாதம் — ரூபா 8/- 3 மாதம் — ரூபா 24/-
6 மாதம் — ரூபா 48/- 1 வருடம் — ரூபா 96/-

பெயர்: ........................................................

முகவரி: ........... ...........................................

........................... ..........................

தொலைபேசி இலக்கம்:- ..............................

சந்தாக் காலம்: ......... ரூபா ......... சதம் .........

அஞ்சல் அல்லது காசுக் கட்டளையுடன் அனுப்ப வேண்டிய முகவரி:- ''தொழிலாளர் பாதை''
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு-10

வாசியுங்கள்:

**இலவசக் கல்வியைக் காப்பது எப்படி?**



விலை: ரூபா. 7–00

வாசியுங்கள்




விலை: 25-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாண வவுனியா உள்ளூராட்சித் தேர்தல்:


# யூ.என்.பி.யின் 'ஜனநாயக புனருத்தாரணத்தின்' நிர்வாணக் கோலம் அம்பலம்

கிழக்கு மாகாணத்திலும் வவுனியாவிலும் 40 உள்ளூராட்சிச் சபைகளுக்காக மார்ச் 1-ம் திகதி நடைபெற்ற தேர்தல், ஏகாதிபத்திய நலன்களின் பேரில் ஒடுக்கப்படும் தேசிய இனங்களதும் தொழிலாளர் வர்க்கத்தினதும் ஜனநாயக உரிமைகளைத் துடைத்துக்கட்டும் யூ. என். பி. அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைகளை உக்கிரமாக்கியுள்ளது. மறுபுறத்தில் இத்தேர்தல் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் வங்குரோத்தையும் உரிந்து காட்டியுள்ளது.

இத் தேர்தலில் பொலிசாரும் ஆயுதப் படையினரும் முறைகேடான விதத்தில் நடந்து கொண்டனர் என்பதை ஏறாவூர் நகரசபை, காத்தான்குடி பிரதேச சபை தேர்தல் சம்பவங்களைப் பற்றி ஆராயத் தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிட்டியின் ஆரம்ப அறிக்கைகள் அங்கீசரித்துள்ளன.

''தேர்தலைச் சீர்குலைத்தவர்கள் பொலிஸ் சீருடையில் அல்லது அதையொத்த சீருடையில் இருந்தனர்... தேர்தல் நிலையங்களில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசார் மட்டுமன்றி உயர் மட்டத்தில் உள்ளோரும் தேர்தல் ஊழல்களின் தாக்கத்தினை மூடி மறைப்பதில் ஈடுபட்டிருந்தனர். ('ஐலன்ட்' மார்ச் 21)

'ஜனநாயகத்தை புனருத்தாரணம்' செய்வதாகக் கூறிக் கொண்டு யூ. என். பி. அரசாங்கம் ஆயுதப் படைகளின் முழு அளவிலான அடக்குமுறை அட்டூழியங்களுக்கு மத்தியில் நடாத்திய உள்ளூராட்சி தேர்தல் ஊழல் நடவடிக்கைகளில் சில வருமாறு: ''ஏறாவூர் நகர வாக்களிப்பு நிலையம். ஏறாவூர் தமிழ் மகாவித்தியாலயம் (மலே வாக்காளர்கள்) காலை சுமார் 7/20 மணியளவில் -18 வாக்காளர்கள் வாக்களித்தனர். பின்னர் ஒரு ஆயுதம் தாங்கிய குழு வாக்குச் சாவடிக்குள் நுழைந்தது. வாக்களிக்க வந்த வாக்காளர்கள் துரத்திக் கலைக்கப்பட்டனர் அல்லது தாமாகவே திரும்பிச் சென்றனர். அவர்கள் வாக்குச் சீட்டுப் புத்தகங்களைப் பறித்தெடுத்தனர். சில வாக்குச் சீட்டுக்கள் அவர்களாலேயே புள்ளடியிடப்பட்டு வாக்குப் பெட்டிக்குள் தள்ளப்பட்டது. அவர்கள் வெளியேறியதன் பின்னர் இரண்டு வாக்குச் சீட்டு புத்தகங்களில் ஒரு சின்னத்துக்கு வாக்களிக்கப்பட்டதோடு விருப்புரிமை வாக்குக்கள் இரு வேட்பாளர்களுக்குப் போடப்பட்டிருந்தன. பலாத்காரமாகப் பறித்தெடுக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை 542.''



இனவாத யுத்தத்தினால் இன்னமும் முகாம்களில் தள்ளப்பட்டுள்ள கிழக்கு மாகாண தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் — சரஸ்வதி மண்டபம், பம்பலப்பிட்டி.

ஏறாவூரில் இந்த தேர்தல் மோசடிகளின் மற்றுமோர் நிலையமாக விளங்கிய ஏறாவூர் விபுலானந்த வித்தியாலயத்தில் இடம்பெற்ற ஆயுதப் படைகளின் தலையீடுகளைப் பற்றிக் குறிப்பிடுகையில் இந்த ஆரம்ப அறிக்கை மேலும் கூறுவதாவது: ''காலை 7 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமாக இருந்த வேளையில் ஆயுதம் தாங்கிய சில நபர்கள் வாக்குச் சாவடிக்குள் நுழைந்தனர். அவர்கள் தலைமை தேர்தல் அதிகாரி (S. P. O.) யிடம் இருந்து வாக்குச் சீட்டுப் புத்தகங்களைப் பிடுங்கியதோடு, பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையையும் விசாரித்தனர். 16 புத்தகங்களில் அடையாளமிட்டு 800 வாக்குச் சீட்டுக்கள் வாக்குப் பெட்டிக்குள் திணித்தனர்.''

ஏறாவூர் விபுலானந்த வித்தியாலயத்தில் இடம்பெற்ற இந்த ஆயுதப் படையின் பயங்கரங்களின் பின்னர் அங்கு விஜயம் செய்த உதவி பொலிஸ் அதிபர் வாக்குச் சாவடியில் இந்த இலட்சணத்திலான சம்பவங்கள் எதுவுமே இடம் பெறவில்லை

( 8ம் பக்கம் பார்க்க )

# அப்புத்தளை தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக பொய் வழக்கு

அப்புத்தளைத் தோட்ட நிர்வாகத்தின் தூண்டுதலின் பேரில் கடந்த ஜனவரி 13ம் திகதி பொலிசாரால் கைது செய்யப்பட்டு, றிமாண்டில் தள்ளப்பட்ட 8 தொழிலாளர்கள் பெப்ரவரி 23ம் திகதி பண்டாரவளை நீதிமன்றத்தினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். இத் தொழிலாளர்களுக்கு எதிராக ''சட்டவிரோதமாக கூடியமை, முகாமையாளரையும் அவரது மனைவியையும் தாக்கியமை, கொலை செய்ய முயன்றமை, கோழிகளையும் கால்நடைகளையும் கொன்று தின்றமை, முகாமையாளரின் பயிர்களுக்குத் தீங்கு விளைவித்தமை'' முதலான பொய்க் குற்றச்சாட்டுக்களின் பேரில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணை முடிவடைந்து தீர்ப்பு வழங்கும் வரை இச் சகல தொழிலாளர்களும் காலை 6 மணி — மாலை 4 மணிக்கும் இடையே தினமும் அப்புத்தளை பொலிசில் ஆஜராக வேண்டும் எனவும் கட்டளையிடப்பட்டுள்ளது.

சம்பளத்தை சரி அரைவாசியாக வெட்டிக்குறைக்கும் நிர்வாகத்தின் நடவடிக்கைக்கு எதிரான போராட்டத்தில் இறங்கிய 'குற்றத்தின்' பேரிலேயே தொழிலாளர்கள் வேட்டையாடப்பட்டுள்ளனர். இந்நாட்களில் தேயிலைச் செடிகளில் கொழுந்து மிகவும் குறைவு. இதனால் ஒரு தொழிலாளி 3 கிலோகிராம் கொழுந்து தன்னும் கொய்வது கஷ்டமாக உள்ளது. ஆனால் தோட்ட நிர்வாகம் ஒரு தொழிலாளி எப்படியும் 22 கி.கி கொழுந்து கொய்ய வேண்டும் என அடம்பிடித்து வருகின்றது. இந்தச் சாத்தியமற்ற இலக்குகளை எட்ட முடியாத தொழிலாளர்களின் ஒரு நாள் வேலையை அரைநாள் வேலையாக நிர்வாகம் குறித்துக் கொள்கின்றது. தமது சம்பளம் சரி அரைவாசியாக வெட்டப்படுவதைத் தொழிலாளர்கள் வன்மையாக எதிர்த்துள்ளனர். இதனால் தலைவர்கள் அதைப்பற்றி கேள்வி எழுப்ப நேரிட்டது. இதைத் தொடர்ந்து தலைவர்களுக்கும் தோட்ட நிர்வாகிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 18 கி.கி கொழுந்து கொய்யவேண்டும் என நிர்வாகம் கூறியுள்ளது.

இந்த இலக்கை எட்டுவதும் சாத்தியம் இல்லாது போயிற்று. இதைச் சாதகமாக்கிக் கொண்டு தோட்ட நிர்வாகம் சம்பளத்தை சரி அரைவாசியாக வெட்டியுள்ளது. பெப்ரவரி 10ம் திகதி சம்பளம் பெறவந்த தொழிலாளர்கள், தமது சம்பளம் அரைவாசியாக வெட்டப்பட்டிருப்பதை அறிந்து அதை ஏற்க மறுத்தனர். தோட்ட முகாமையாளரைக் கண்டு கேள்வி எழுப்பினர். ''வேலை செய்த நாளில் அரைநாளுக்கு மட்டும் சம்பளம் இருப்பதாயும் விருப்பமானால் எடுங்கள்; இல்லாவிட்டால் விரும்பியதைச் செய்யுங்கள்'' என முகாமையாளர் கூறியுள்ளார்.

சுமார் 1000 தொழிலாளர்கள் சம்பளத்தைப் பகிஷ்கரித்து, தோட்ட முகாமையாளரின் இல்லத்துக்கு அருகே பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். இச் சமயத்தில் இரண்டாவது முகாமையாளர் தொழிலாளர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்ய பொலிஸ் நிலையம் சென்றுள்ளார். உடனடியாகச் செயற்பட்ட தொழிலாளர்கள் தமது போராட்டத்திற்கு எதிராக பொலிசார் தலையிடுவதை தடை செய்யும் பொருட்டு மரங்களை வெட்டி வீதிக்கு குறுக்கே போட்டனர். தோட்டத்துக்கு வந்த பொலிசார் தொழிலாளரை பிரச்சார இயக்கத்தை நிறுத்தும்படியும் சம்பளத்தை பெற்றுக்கொள்ளும்படியும் மிரட்டியுள்ளனர்.

பெப்ரவரி 13ம் திகதி மாலை 1 மணிக்கு தோட்டத்திற்குள் பாய்ந்து விழுந்த பொலிசார், தோட்ட நிர்வாகம் வழங்கிய பட்டியலின் படி இ.தொ.கா. தலைவர்களான ரி.சங்கரப்பிள்ளை, நந்தகுமார், ஜ.தொ.கா. பாலையா, புஷ்பராஜ், பெரியசாமி, கிருஷ்ணசாமி, சிவகுருநாதன் முதலான தொழிலாளர்களையும், மாரியக்கா என்ற பெண் தொழிலாளியையும் கைது செய்தனர். மாரியக்கா ஏற்கனவே வேலை வழங்காதது சம்பந்தமாக முகாமையாளர்களுடன் பேச்சுவார்த்தைப்பட்டதால் இந்த வேட்டையில் அவர் முக்கிய இலக்காக விளங்கினார் என தொழிலாளர்கள் தெரிவித்தனர். இந்தப் பட்டியலில் அடங்கிய ஏனைய தொழிலாளர்களைத் தேடுவதிலும் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

பெப்ரவரி 14ம் திகதி வேலைக்குச் சென்ற தொழிலாளர்கள், பொலிசாரால் கைது செய்யப்பட்ட தொழிலாளர்கள் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதைக் கண்டனர். இந்நிலையில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானம் செய்தனர். ''வேலை செய்யும் நாட்களுக்கு முழுச் சம்பளம் கொடு!, மேலே குறிப்பிட்ட 8 தொழிலாளருக்கு எதிரான வழக்கை வாபஸ்பெறு!, முகாமையாளரை விலக்கு!'' என்ற கோரிக்கையின் அடிப்படையில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இ.தொ.கா. உட்பட அனைத்து தொழிற் சங்கத் தலைவர்களும் இவ் வேலை நிறுத்தத்திற்கு எதிராக செயற்பட்டு வருகின்றார்கள்.


கடந்த பெப்ரவரி 23ம் திகதி தொழிலாளர்கள் பண்டாரவளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட வேளையில் அவர்களை விடுதலை செய்விக்க இ.தொ.கா, ஜ.தொ.கா. உட்பட எந்தவொரு தொழிற்சங்கத் தலைமையும் முயலவில்லை. ஒவ்வொரு தொழிலாளியின் பேரிலும் ரூபா 500/- பிணைப்பணம் கட்டி அவர்களை விடுதலை செய்வித்தவர்கள் சக தொழிலாளர்களே.

'தொழிலாளர் பாதை' நிருபருடன் பேசிய அப்புத்தளை தோட்டத் தொழிலாளர்களான றோஸ்மேரி சண்முகநாதன் கூறியதாவது; ''சகல தொழிற் சங்கங்களும் முகாமையாளருடன் ஒத்துழைக்கின்றன. இ.தொ.கா. உள்ளடங்கலான தொழிற் சங்கத் தலைவர்கள் முகாமையாளர்கள் தருகின்ற சம்பளத்தை ஏற்றுக்கொண்டு

( 8ம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோசலிச லேபர் லீக் தேசிய செயலாளர் நிக் பீம்ஸின் இலங்கை விரிவுரைச் சுற்றுலா



நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அவுஸ்திரேலியக் கிளையான சோசலிஸ்ட் லேபர் லீக்கின் (S. L, L.) தேசியச் செயலாளரான நிக் பீம்ஸ் மார்ச் 15 தொடக்கம் மார்ச் 18 வரை இலங்கையில் நடாத்திய விரிவுரைச் சுற்றுலா வெற்றிகரமான முறையில் முற்றுப் பெற்றது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அழைப்பின் பேரிலேயே நிக் பீம்ஸ் இந்த இலங்கை விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

அவரது விரிவுரையின் பொருளாக 'உற்பத்தியின் பூகோளமயமும் புரட்சிகரப் பணிகளும்' என்பதும் விளங்கியது. முதலாவது விரிவுரை மார்ச் 15ம் திகதி கண்டி சம்பத் மண்டபத்தில் நடைபெற்றதோடு, அதில் கலந்து கொண்டோர் மிகவும் அவதானமாக விரிவுரைகளை செவிமடுத்ததோடு இறுதியில் மேலாய விளக்கங்களுக்காக கேள்வி எழுப்பி, விடை பெற்றனர்.

இரண்டாவது விரிவுரை பண்டாரவளை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது. அன்று காலையில் இடதுசாரி எதிர்ப்பின் மார்க்சிச தொடர்ச்சிக்கான போராட்டத்தின் 70வது ஆண்டு நிறைவை குறிக்கும் கண்காட்சியை ரசிக்க 200க்கும் அதிகமான தொழிலாளர்களும் இளைஞர்களும் வருகை தந்திருந்தனர்.

இறுதி விரிவுரை கொழும்பு பல்கலைக்கழக புதிய கலா மண்டபத்தில் நடைபெற்றதோடு அதில் தொழிலாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோர் பங்கு கொண்டனர். தோழர் நிக் பீம்சின் இந்த விரிவுரைகள் கடந்த ஒன்றரைத் தசாப்த காலமாக உலக முதலாளித்துவப் பொருளாதார அமைப்பினுள் ஏற்பட்ட பெரிதும் அடிப்படையான மாற்றங்களை வரலாற்றுத் தொடர்ச்சியின் ஒரு பாகமாக ஆராய்ந்து காட்டின. இந்த ஆய்வுகள், கார்ள் மார்க்சினால் 'கப்பிட்டால்' (மூலதனம்) நூலினுள் விளக்கிய முதலாளித்துவத்தின் வரலாற்று விதிகள் இன்று உலகளாவிய ரீதியில் தொழிற்படும் முறையை விளக்குவதாக இருந்தது. மேலும் இந்த விரிவுரைகள் ஒரு புரட்சிகர சக்தி என்ற முறையில் தொழிலாளர் வர்க்கத்தின் எதிரில் உருவாகியுள்ள வரலாற்றுப்பணிகளை வரைந்து காட்டுவதாக விளங்கின.



கொழும்பு பல்கலைக் கழக புதிய கலா மண்டப விரிவுரையில் நிக் பீம்ஸ்

# கிழக்கு மாகாண வவுனியா உள்ளூராட்சி தேர்தல்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

எனக் கூறும் அறிக்கையை நெருக்குவாரத்தின் மூலம் பெற்றுக் கொண்டார்.

வடக்கு-கிழக்கில் வழமையாகிவிட்ட ஆயுத படைகளின் துப்பாக்கிப் பிரயோகம் வாக்குச் சாவடிக்குள் நுழைக்கப்பட்டது பற்றிப் பேசும் இந்த அறிக்கை கூறுவதாவது: ''குடியிருப்பு கலைமகள் தமிழ் மகா வித்தியாலயம் மண்டப இல. 1. காலை 7/35 மணியளவில் வாக்களிப்பு இடம்பெற்ற வேளையில் வெளியே துப்பாக்கிப் பிரயோகச் சத்தம் கேட்டது. தேர்தல் அலுவலர்களைப் பொலிசார் நிலத்தில் படுக்குமாறு கட்டளையிட்டனர். வாக்களிப்பு நிலையத்துக்கு வெளியே கியூவில் நின்று கொண்டிருந்த வாக்காளர்களும் நிலத்தில் படுக்கும்படி கேட்கப்பட்டனர். துப்பாக்கிப் பிரயோகம் 1/2 மணித்தியாலம் இடம் பெற்றது. தலைமை தேர்தல் அதிகாரி பாவிக்கப்படாத வாக்குச் சீட்டு கட்டுக்களை சேர்த்துக் கொண்டு கட்டிடத்தின் பின்னால் சென்றார். சில நேரத்தின் பின்னர் இராணுவ அதிகாரிகள் தேர்தல் அலுவலர்களைத் திரும்பி வரச் செய்தனர். அப்போது அவர்கள் அரைவாசி பாவிக்கப்பட்ட ஒரு வாக்குச் சீட்டுப் புத்தகத்தில் இருந்து 35 வாக்குச் சீட்டுக்கள் எடுத்துச் செல்லப்பட்டிருந்தன... பலாத்காரமாக பிடுங்கிச் செல்லப்பட்ட வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை 600''

இத்தகைய சம்பவங்கள் காத்தான்குடி ஷாவியா வித்தியாலயம் புதுக்காத்தான்குடி நெய்தல் நிலையம், மிலாத் மகளிர் வித்தியாலயம், மீரா மகளிர் மகாவித்தியாலயம் போன்ற வாக்களிப்பு நிலையங்களிலும் இடம்பெற்றதாக இந்த விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தனையும் நடந்த நிலையிலேயே முதலாளித்துவப் பத்திரிகைகளும் தேர்தல் ஆணையாளரும் தேர்தல் அமைதியான முறையில் நடைபெற்றதாகவும் 70 வீதமானோர் தேர்தலில் வாக்களித்ததாயும் முழுப் பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தன.

இந்த தேர்தல் சம்பவங்கள் வடக்கு—கிழக்கு மாகாண தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு மட்டுமன்றி முழுத் தொழிலாளர் வர்க்கத்துக்கும் முக்கிய படிப்பினையை வழங்கியுள்ளது. ஏகாதிபத்திய பன்னாட்டுக் கம்பனிகளின் நலன்களுக்கு இலங்கையை முழுமனே அடிமைப்படுத்தச் செயற்படும் யூ. என், பி. அரசாங்கம் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளையும், தொழிலாளர் வர்க்கத்தின் ஜனநாயக உரிமைகளையும் ஒழித்துக் கட்டியுள்ளது என்பது அம்பலமாகியுள்ளது. யூ. என். பி அரசாங்கம் இனவாதத்துக்கு தூபமிடுவதன் மூலம் வடக்கிலும் தெற்கிலும் தொழிலாளர் வர்க்கத்தைப் பிளவுபடுத்தும் இயக்கத்தை விரிவுபடுத்தவும், இராணுவத்தையும் பொலிசையும் வீதியில் இறக்கவுமே இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு திகதி குறித்தது.

ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் முதலாளி வர்க்கத்தினைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ் அரசியல் கட்சிகளிடம் யூ. என். பி. அரசாங்கத்தின் இராணுவத் தாக்குதலுக்கோ அல்லது ஜனநாயக உரிமைகள் ஒழிக்கப்படுவதற்கோ எதிராகப் போராடும் வேலைத் திட்டம் கிடையாது. இராணுவத் தாக்குதல் உச்சக் கட்டத்தினை எட்டியுள்ள முதலாளித்துவ அமைப்பினுள் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளைப் போலவே தொழிலாள வர்க்கத்தின் உரிமைகளும் சிதறடிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் முதலாளி வர்க்கத்தின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தமிழ் தேசிய இனத்தினரின் ஜனநாயக உரிமைகளை ஒழித்துக் கட்டுவதிலும் தமது எதிர்ப்பாளர்களைக் கொன்றுதள்ளி, முதலாளித்துவ அமைப்பினை காக்கும் இராணுவ பலத்தைத் தம் கைக்குள் போட்டுக் கொள்வதிலும் ஈடுபட்டுள்ளனர். தொழிலாளர் வர்க்கத்தின் சோசலிச புரட்சிக்கு எதிராக ஏற்கனவே இந்திய முதலாளி வர்க்கத்துடன் இணைந்து தொழிற்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் இன்றும் அந்த இலக்கிலேயே யூஎன்பி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைக்கு திகதி குறிப்பதில் இறங்கியுள்ளனர். இவர்களின் தொழிற்பாடு ஏகாதிபத்திய நலன்களுடன் இணைந்ததாக உள்ளது.

இத்தருணத்தில் சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜக் கட்சியினர் முதலாளித்துவ அமைப்பினுள் அரசியல் தீர்வுக்கு இன்னமும் வாய்ப்பு உள்ளது என்ற நச்சுப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். உண்மையில் இவர்களின் இந்த வேலைத்திட்டம் வடக்கு—கிழக்கினதும், தெற்கினதும் தொழிலாளர் வர்க்கத்தினை முதலாளித்துவத்துக்கு கீழ்ப்படுத்தி, ஏகாதிபத்திய வேலைத்திட்டத்துக்கு அடிமைப்படுத்துவதாகும்.

தமிழ் ஒடுக்கப்படும் மக்களதும் முழுத் தொழிலாளர் வர்க்கத்தினதும் ஜனநாயக உரிமைகளைத் துடைத்துக் கட்டும் நடவடிக்கை அவர்களை முதலாளித்துவ நெருக்கடிக்கு கீழ்ப்படுத்தும் வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகும். ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் முதலாளி வர்க்கத்திடம் ஜனநாயக உரிமைகளைக் காக்கும் எந்தவொரு சுயாதீனமான வேலைத்திட்டமும் கிடையாது. தொழிலாளர் வர்க்கத் தலைமையில் சோசலிச வேலைத்திட்டத்தினை அமுலுக்கிடுவதன் மூலம் மட்டுமே ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளைக் காக்க முடியும்.

வடக்கு-கிழக்கு இனவாத யுத்தத்துக்கு ஒரு ஆளோ அல்லது ஒரு சதமோ வழங்கக் கூடாது எனவும், வடக்கு கிழக்கிலிருந்து இராணுவத்தை வாபஸ் பெறும்படியும் கோரும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், இலங்கை—தமிழ் ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தினை அமைக்கும் வேலைத்திட்டத்தினை முன்வைத்துள்ளது.

# அப்புத்தளை தோட்ட தொழிலாளருக்கு...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பவும் வேலைக்குச் செல்லும்படி கூறுகின்றனர்.'' என்றார்.

தொழிலாளர்களுக்கு எதிரான வழக்குகள் நிர்வாகிகளாலும் பொலிசாராலும் சோடிக்கப்பட்டவை என தொழிலாளர்கள் தெரிவித்தனர். தமிழ் பேசும் தொழிலாளர்களுக்கு எதிராக இனவாதத்தினைத் தூண்டிவிட தோட்ட நிர்வாகிகள் செய்யும் முயற்சி பற்றியும் 'தொழிலாளர் பாதை'க்கு செய்தி கிடைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அட்டன் பொதுக் கூட்டம்:

# ''ஜனநாயக உரிமைகளை காக்கும் வெறும் எதிர்ப்பு அணி எமது இலக்கு அல்ல''

யூ. என். பீ. அரசாங்கம் அமுலுக்குக் கொணர்ந்துள்ள புதிய அவசரகாலச் சட்ட ஒடுக்குமுறை விதிகளுக்கு எதிராக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பெப்ரவரி 13ம் திகதி அட்டன்—டிக்கோயா நகர சபை மண்டபத்தில் பகிரங்க கூட்டமொன்றை நடாத்தியதோடு தோட்டத் தொழிலாளர்களும் இளைஞர்களும் இதில் கலந்து கொண்டனர்.

கூட்டத்துக்கு தலைமை தாங்கிய பு. க. க. மத்திய குழு உறுப்பினர் எம். அரவிந்தன் பின்வருமாறு குறிப்பிட்டார். ''யூ. என். பி.யின் அவசரகால விதிகளுக்கு எதிராக நடாத்தப்படும் ஒரே கூட்டம் பு. க. க. நடாத்தும் இக் கூட்டமே. சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, சீ. எம். யூ. மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் கடந்த ஜனவரி 11ம் திகதி கூடி, இந்தச் சட்டங்களுக்கு எதிராக எதுவும் செய்வதில்லையெனத் தீர்மானம் செய்துள்ளனர்...

''தொழிற் சங்கங்களின் இந்தத் தொழிற்பாடு தலைமைகளின் தனிப்பட்ட குறைபாடுகளால் ஏற்படவில்லை'' எனச் சுட்டிக்காட்டிய அரவிந்தன், உற்பத்தியில் முன்னொரு போதும் இல்லாத அளவில் பூகோளமயமாக்கம் ஏற்பட்டுள் நிலைமையில் தேசிய வாதத்தினை அடிப்படையாகக் கொண்ட இந்த சங்கங்களால் தொழிலாளர் வர்க்கத்தின் எந்தவொரு உரிமையையும் காக்கும் முன்நோக்கினைச் சிருஷ்டிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இத்துரோகத் தலைவர்களின் காட்டிக் கொடுப்புக்களுக்கு எதிராக பு. க. க. வின் தலைமையிலான மத்திய வங்கி ஊழியர் சங்கம் அவசரகாலச் சட்ட விதிகளுக்கு எதிராக சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராடுவதன் அவசியத்தினை வலியுறுத்தும் ஒரு பிரேரணையை நிறைவேற்றி உள்ளதையும் அரவிந்தன் கூட்டத்தினரின் கவனத்திற்குக் கொணர்ந்தார்.

இக் கூட்டத்தில் சிறப்புப் பேச்சாளராக அழைக்கப்பட்டிருந்த பு. க. க. மத்திய குழு உறுப்பினர் டபிள்யூ. ஏ. சுனில் பின்வருமாறு குறிப்பிட்டார். ''அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் விஜேதுங்க அரசாங்கம் புதிதாக அமுல் செய்துள்ள ஒடுக்குமுறைகளுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் நடாத்தும் பிரச்சாரத்தின் ஒரு பாகமாகவே இக் கூட்டத்தினை நடாத்துகின்றது. எமது பிரச்சாரத்தின் இலக்கு ஜனநாயக உரிமைகளைக் காக்கும் வெறும் எதிர்ப்பு இயக்கத்தை கட்டியெழுப்புவது அல்ல. முதலாளித்துவத்துக்கு எதிராகச் சோசலிச அனைத்துலகவாத முன்நோக்கின் அடிப்படையிலான தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கலள முதலாளித்துவத்திலிருந்தும் துரோக அதிகாரத்துவங்களில் இருந்தும் சுயாதீனமான முறையில் அணி திரட்டுவதேயாகும்.

''1993 டிசம்பர் 20ம் திகதி விஜேதுங்க அரசாங்கம் இந்த ஒடுக்குமுறைச் சட்டத்தினை பிரகடனம் செய்ததுதான் தாமதம் அதற்கு எதிரான போராட்டத்தைத் தொடக்கி வைத்தது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே. இந்தச் சட்டங்கள் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களை நசுக்குவதற்கென இயற்றப்பட்டுள்ளதாக நாம் எச்சரிக்கை செய்தோம். இந்த எச்சரிக்கை பிழையற்றதென்பது முழுமனே நிரூபிக்கப்பட்டுள்ளது, தொலைத் தொடர்பு திணைக்களத் தொழிலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு எதிராக அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்த அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது.

''தொழிலாளர் வர்க்கத்தின் துரோகத் தலைவர்கள் இந்தச் சட்டங்களை எதிர்த்து எந்தவொரு போராட்டமும் நடத்தாதது மட்டுமன்றி இந்தச் சட்டங்கள் மூலம் தொழிலாளர் வர்க்கத்தை அடக்கி வைக்கத் தமது ஆதரவை வழங்குவதாக அரசுக்குத் தமது மௌனத்தின் மூலம் உத்தரவாதம் வழங்கியுள்ளனர். இ. தொ. கா, தலைவர்கள் அரசாங்கத்தின் உள்ளே இருந்துகொண்டு இந்தச் சட்டத்துக்குக் கை உயர்த்தி அங்கீகாரம் வழங்கியுள்ளனர். தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் இத்துரோகத் தலைவர்களின் காட்டிக் கொடுப்பை உடைத்துக் கொண்டு அடக்குமுறைச் சட்டங்களுக்கும் முதலாளித்துவத் தாக்குதல்களுக்கும் எதிரான போராட்டத்தை ஒழுங்கு செய்ய முன்வர வேண்டும்.

''விஜேதுங்க அரசாங்கம் இந்த சட்டங்களைப் பிரகடனம் செய்ததன் மூலம் ஏகாதிபத்திய, காலனித்துவ வேலைத்திட்டத்தினை நடைமுறைக்கிடுவதை வேகமாக்கியுள்ளது. தோட்டங்கள், வங்கிகள், பக்டரிகள் தனியார்மயமாக்கமும், வேலை நீக்கங்களும், சமூக நலன்புரி திட்ட ஒழிப்புக்களும் இந்த வேலைத்திட்டத்தின் தவிர்க்க முடியாத இலக்காக உள்ளன. நீட்வூட், தலவாக்கலை, மஸ்கேலிய மரே தோட்டத் தொழிலாளர் கடந்த காலங்களில் இந்தத் தாக்குதல்களுக்கே முகம் கொடுத்தனர்.''

விஜேதுங்க அரசாங்கத்தின் புதிய எதிர்ப் புரட்சித் திருப்பத்தின் பின்னணியாக உள்ள உலக முதலாளித்துவ நெருக்கடியின் தன்மையைத் தெளிவுபடுத்திய தோழர். சுனில், உற்பத்திச் சக்திகளின் பண்பு ரீதியான அபிவிருத்திகளின் கீழ் உற்பத்தியின் பூகோள மயமாக்கமும், மூலதனம் நாட்டுக்கு நாடு எடுத்துச் செல்லப்படும் நிலைமைகள் உருவாகியுள்ளதானது தேசிய அரசுகளையும், தேசியப் பொருளாதாரங்களையும் வரலாற்று ரீதியில் காலவதியானவையாக்கியுள்ளது என்றார்.

''விஜேதுங்க அரசாங்கத்தின் அடக்குமுறைச் சட்டங்களுக்கு எதிரான போராட்டத்தினை முழு முதலாளித்துவ தாக்குதல்களுக்கும் எதிரான அனைத்துலக சோசலிச முன்நோக்கின் அடிப்படையில் தொழிலாளர் வர்க்கத்தினை சுயாதீனமாக அணிதிரட்டுவதன் மூலம் மட்டுமே அணி திரட்ட முடியும். இந்தியத் துணைக் கண்ட சோசலிச குடியரசு ஒன்றியத்தின் ஒரு பாகமாக இலங்கை-தமிழீழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தினை ஊர்ஜிதம் செய்ய தொழிலாளர் வர்க்கம் தனது தலைமையின் கீழ் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்ட முன் செல்ல வேண்டும்.''

---

### ஐரோப்பிய ....

(3-ம் பக்கத் தொளர்ச்சி)

கின்றது. மற்றப்படி எல்லாம் ஏமாற்று. விமானப் பயணத்தில் ஒரு சில மணித்தியாலங்கள் எடுக்கும் யூகோசலாவியாவில் இடம்பெறும் யுத்தம் பற்றி அவர்கள் கூறுவதற்கு எதுவும் கிடையாது.''

ஒரு இளம் வேலையற்ற தொழிலாளி ஒரு பத்திரிகையை வாங்கியதோடு கையெழுத்துப் பட்டியலிலும் கையொப்பமிட்டார். அத்தோடு அவர் நான்காம் அகிலத்தின் வரலாறு பற்றிய கேள்விகளையும் எழுப்பினார். எல்லாவற்றுக்கும் மேலாக ஸ்டாலினால் எப்படி ட்ரொட்ஸ்கியையும் இடதுசாரி எதிர்ப்பையும் தோற்கடிக்க முடிந்தது எனக் கேட்டார்.

இது இந்நூற்றாண்டில் மார்க்சிச இயக்கத்தின் வரலாறு, எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் இடதுசாரி எதிர்ப்பு நடாத்திய போராட்டத்தின் முக்கியத்துவம் பற்றிய கலந்துரையாடல்களுக்கு இட்டுச் சென்றது. ஏனைய நாடுகளில் தொழிலாளர் வர்க்கத்தின் தோல்வி சோவியத் தொழிலாளர்களைத் தனிமைப்படுத்தியதோடு இடதுசாரி எதிர்ப்பின் தோல்வியையும் சாத்தியமாக்கியதாக பீ.எஸ். ஏ. அங்கத்தவர்கள் விளக்கினர். ட்ரொட்ஸ்கிஸ்டுகளும், புரட்சியாளர்களும் 1930பதுகளில் பெருவாரியாகக் கொலை செய்யப்பட்ட போதிலும் ஸ்டாலினால் அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்தை தோற்கடிக்க முடியவில்லை என்பதை அவர்கள் சுட்டிக் காட்டினர்.

---

பேர்ளின் உலகத் தொழிலாளர் மாநாட்டு விஞ்ஞாபனம்:

**ஏகாதிபத்திய யுத்தத்தையும் காலனித்துவத்தையும் எதிர்!**

(நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் விஞ்ஞாபனம்)

விலை— ரூபா 20

# ஆர். ஏ. பிட்டவெல நினைவு நிதி ரூபா .75,000

1988 நவம்பர் 12ம் திகதி ஜே. வி. பி. பாசிஸ்டுகளால் கொலை செய்யப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தினதும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும் அங்கத்தவரான தோழர் ஆர்.ஏ. பிட்டவெல நினைவுத் தூபியை நிறுவும் பொருட்டு உதவி வழங்குமாறு பு,க.க. தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களிடம் வேண்டுகின்றது.

தோழர். பிட்டவெல நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டத்தில் உறுதியாக நின்று போராடிய பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதியாவர். தற்கு அவர் முதலாளி வர்க்க அடக்குமுறைக்கு எதிராகவும் சமசமாஜ - கம்யூனிச - நவசமசமாஜ துரோக அரசியலுக்கு எதிராகவும் ஜே. வீ. பி.யின் பாசிசத்துக்கு எதிராகவும் போராடிய ஒரு போராளியாவார். இதனால் அவர் யூ. என். பி. அரசாங்கத்தினதும் துரோக தொழிலாளர் வர்க்கத் தலைவர்களதும் ஜே. வீ. பி. பாசிச கொலையாளிகளதும் ஆத்திரத்திற்கு இலக்கானார். பிட்டவெல படுகொலையானது இந்தச் சகல சக்திகளும் பாட்டாளி வர்க்கப் போராளிகள் தொடர்பாக எத்தனை வன்மம் பாராட்டுகின்றன என்பதைக் காட்டியுள்ளது.

இப்போராளி பற்றிய நினைவு தொழிலாளர் வர்க்கத்தினுள் நீண்டகாலம் உயிர் வாழும். இதில் சந்தேகம் கிடையாது. பு. க. க. இந்த நினைவுத் தூபியை கட்டி எழுப்புவதன் மூலம் அவர் ட்ரொட்ஸ்கிசத்தின் பேரில் முன்னெடுத்த போராட்டத்தினை தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் நினைவில் இருத்தும். இதற்கு தங்களின் அதிகூடிய உதவி நிதியை வழங்கும்படி தோழமையுடன் வேண்டுகின்றோம்.

---

### திகதி மாற்றம்

உட்பக்கங்களில் இப்பத்திரிகையின் திகதியை ஏப்ரல் 22 என திருத்தி வாசிக்கவும்.

ஆ-ர்

---

வாசியுங்கள்!

**சோவியத் யூனியன் எங்கே செல்கின்றது?**

தொடர்புகளுக்கு:- விலை ரூபா. 25.00
ஆனந்த வக்கும்புற
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு—10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம், பாசிச ஆபத்தை எதிர்கொள்வோம்!...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சார்பு ரீதியில் உயர்ந்த சம்பளங்கள் மூலம் நிலைத்து வந்தன. ஆனால் இன்று முதலாளித்துவம் ஒரு பூகோள ரீதியான உழைப்புச் சந்தையை உருவாக்கி, பூமியை என்றுமில்லாத மலிவு உழைப்புச் சக்தியின் மூலமாக துடைத்துச் செல்வதால் அவை தகர்ந்து செல்கின்றன. முதலாளித்துவ ஆட்சிகளைப் பொறுத்தமட்டில் அவை விதிவிலக்கற்ற விதத்தில் பலவீனங்களாலும், ஒழுங்கீனங்களாலும் பண்பாக்கம் செய்யப்பட்டுள்ளன. கிளிண்டன் ஆட்சியின் வெளிநாட்டுக் கொள்கை பொஸ்னியாவிலும் சோமாலியாவிலும் ஹெயிட்டியிலும் தோல்வி கண்டாதலும்சேமநலன், சுகாதாரம், சமூக வேலைத் திட்டங்கள் மீதான அவரின் தாக்குதல்கள் நீண்ட தூரம் செல்லாததாலும் வெறுப்படைந்த ஆளும் வர்க்க கோஷ்டிகளின் தாக்குதலால் நிரந்தர நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

ஜப்பானில் 'சீர்திருத்த' ஹொசக்காவா அரசாங்கம் அது நிறுவப்பட்ட ஒரு சில மாதங்களுள் வீழ்ச்சி கண்டது. பழைய ஆளும் கட்சியான லிபரல் ஜனநாயகவாதிகள் ஜப்பானிய ஆளும் வர்க்கத்திற்கு ஒரு உறுதியான ஆட்சிக் கருவி இல்லாமல் தொடர்ந்து விட்டுவைத்துள்ளனர். பிரித்தானியாவில் ஜோன் மேஜரின் டோரி ஆட்சி நாளுக்கு நாள் ஈடாட்டம் கண்டு வருகின்றது. இது பிரான்சின் பலதூருக்கும், ஜேர்மனியின் கோலுக்கும் பொருந்தும்.

உண்மையில் இந்தப் பிற்போக்கு ஆட்சியாளர்களைத் தோற்கடிப்பதற்கான பலத்தினைத் தொழிலாளர் வர்க்கம் கொண்டுள்ளது. ஒரு தூரதிருஷ்டியும், திடசங்கற்பமும் கொண்ட புரட்சித் தலைமை வழங்கப்படின் தொழிலாளர் வர்க்கம் அதற்கு எதிரான சகல தாக்குதல்களுக்கும் எதிராகப் பதில் தாக்குதல் தொடுக்கும்.

## தலைமை நெருக்கடி

இது எம்மை தீர்க்கமான வரலாற்றுப் பிரச்சினைக்கு இட்டுச் செல்கின்றது: தொழிலாளர் வர்க்கத்தின் தலைமை நெருக்கடி. முதலாளித்துவத்தின் தாக்குதலின் எதிரில் தொழிலாளர் வர்க்கம் அதன் பழைய அமைப்புக்களால் பின்னடிக்குத் தள்ளப்பட்டுள்ளதோடு அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இன்றுள்ள சகல அமைப்புகளதும்-சமசமாஜ-கம்யூனிச – நவசமசமாஜ, இ. தொ. கா. மற்றும் தொழிற்சங்க அதிகாரத்துவங்கள்—வெளிநாடுகளில் உள்ள சமூக ஜனநாயக, ஸ்டாலினிச கட்சிகளதும் முழு முயற்சியானது ஆளும் வர்க்கக் கொள்கைகளுக்கு எதிரான தொழிலாளர் வர்க்கத்தின் எதிர்ப்பினை நசுக்கும் திசையிலேயே திருப்பப்பட்டுள்ளது.

இன்றுள்ள மாபெரும் ஆபத்து, இந்த வங்குரோத்து அமைப்புக்களாலும் அவற்றின் கோபரேட்வாத கொள்கைகள், பொருளாதார தேசியவாதத்தினாலும் தொழிலாளர் வர்க்கம் சிரச்சேதம் செய்யப்படுவதேயாகும். தொழிலாளர் இயக்கம் இனியும் அது இந்த அமைப்புக்களால் பாரிசவாதத்துக்கு ஆளாக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. அனைத்து புறநிலை தராதரங்களிலும்-அவர்களின் குறைந்தபடச அளவுகோல் உட்பட - இந்த அமைப்புக்கள் தோல்வி கண்டு விட்டன. நீண்ட காலத்துக்கு முன்பே அவை சமூக அமைப்பில் மாற்றம் உண்டுபண்ணப் போராடும் கோரிக்கையை கைகழுவி விட்டன. பின்னர் அவர்கள் முதலாளித்துவத்தின் கட்டுமானத்தினுள் தொழிலாளர்களின் நிலைமைகளை முன்னேற்றும் முயற்சிகளைக் கைவிட்டனர். இன்று அவர்கள்முதலாளிகளும், முதலாளித்துவ அரசும் வேலை நீக்கங்களையும், சம்பள வெட்டுக்களையும், வேலை துரிதப்படுத்தலையும் சமூக வேலைத்திட்டத்தில் வெட்டுக்களையும் திணிக்க உதவுவதன் மூலம் தொழிலாளர் வர்க்கத்தின் கடந்த கால தேட்டங்களை நாசமாக்குவதில் நேரடியாகப் பங்கு கொள்கின்றனர்.

இன்று அணிதிரண்டு கொண்டுள்ள தொழிலாளர் இயக்கங்கள் முதலாளித்துவ சமுதாயத்தின் சீரழிவினால் உருவாக்கப்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையில் இருந்து வெளியேற வழிகாட்டுவதாய் இல்லை. முதலாளித்துவம் தொழிலாளர்கள் மீதும் மத்தியதர வர்க்கத்தின் பெரும் பகுதியினர் மீதும் தாக்குதல்களை உக்கிரமாக்கும் நிலையிலும் சமசமாஜ - கம்யூனிச – நவசமசமாஜ — இ. தொ. கா மற்றும் தொழிற் சங்கத் தலைமைகள் முதலாளித்துவத்தைப் பேணிக் காக்கின்றனர். இது தொழிலாளர் வர்க்கத்தினைப் பெரும் ஆபத்தில் மாட்டியுள்ளது. சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடன் உச்சக் கட்டத்தினை அடைந்த ஸ்டாலினிசத்தின் காட்டிக் கொடுப்பினால் உருவாக்கப்பட்ட தடுமாற்றங்களில் இருந்தும் சமூக ஜனநாயகவாதிகள், தொழிற் சங்க சீர்திருத்தவாதிகளின் தசாப்தக் கணக்கான துரோகங்களில் இருந்து தோன்றிய அரசியல் குழப்பநிலையில் இருந்தும் முதலாளித்துவம் நன்மையடையப் பார்க்கிறது. அதே சமயம் ஆளும் வர்க்கம் அதன் அமைப்பின நெருக்கடியிலும் அக்கறை காட்டி வருகின்றது.

நலன்புரி அரசினை நிர்மூலமாக்கி முன்னொருபோதும் இல்லாத அளவிலான பாரிய வறுமையினைத் திணிக்கும் பொருட்டு முதலாளித்துவம் புதிய வடிவிலான ஆட்சியை நோக்கிச் செல்கின்றது. இருப்பினும் பழைய பழமைவாத, லிபரல் கட்சிகளின் நெருக்கடியும் சீரழிவும் பொனபாட்டிச பேர்வழிகளினதும் அதிதீவிர வலதுசாரி கட்சிகளின் எழுச்சியும் இடம் பெற்று வருகின்றது.

ஒரு நாட்டின் பின் மற்றொன்றாக பெரும் வர்த்தகங்கள் பிற்போக்கு வாய்வீச்சுக்காரர்களை முன்னணிக்குக் கொணர்வதோடு அவர்களை அரசியலில் பிரபல்யமாக்கவும் துடிக்கின்றன. சமீபகால உதாரணங்களுள் அமெரிக்காவில் றோஸ் பெரொட்டின் தேர்தல் பிரச்சாரம், கனடாவில் பிரெஸ்டன் மன்னிலின் சீர்திருத்தக் கட்சியின் தோற்றம், இத்தாலியில் வெகுஜனத் தொடர்புச் சாதன பெரும் புள்ளி சில்வியோ பெர்லுஸ் கோனியினதும் 'நஷனல் அலையன்சினதும் தேர்தல் வெற்றி அடங்கும். இவை அனைத்திலும் எதிர்கால பொனபாட்டுக்கள் முதலாளித்துவ நெருக்கடியினால் அழிக்கப்பட்டு ஆட்டங் கண்டு கதிகலங்கிப்போன மத்தியதர வர்க்கத் தட்டுக்கும் அத்தோடு தொழிலாளர் வர்க்க, வேலையற்ற இளைஞர் பகுதியினருக்கும் ஜனரஞ்சக அழைப்புக்களை விடுத்துக் கொண்டுள்ளனர்.

மத்தியதர வர்க்க சந்தர்ப்பவாத அமைப்புக்கள்-பழைய 'கம்யூனிஸ்ட்' கட்சிகளின் ஸ்டாலினிஸ்டுகள் தொடக்கம் மாஓவாதிகள், எண்ணற்ற பப்லோவாத திரிபுவாதக் குழுக்கள் — அத்தகைய வலதுசாரி, பாசிச சக்திகளின் பெருக்கத்தின் முக்கியத்துவத்தை ஒன்றில் புறக்கணிக்கின்றனர் அல்லது சற்றும் கவனத்தில் கொள்ளாது விடுகின்றனர். பழைய தொழிலாளர் அதிகாரத்துவங்களின் பிடியைத் தொடர்ந்தும் கொண்டிருக்கவும், தொழிலாளர் வர்க்கத்தினை அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்கவும் செய்யும் அவர்களின் முயற்சிக்கமையவே இது இடம்பெறுகின்றது.

சோசலிசப் புரட்சி, ஸ்டாலினிச எதிர்ப் புரட்சி, பாசிசம், ஏகாதிபத்திய யுத்தத்தில் இருந்து வடித்தெடுக்கப்பட்ட இந்நூற்றாண்டின் மையப் படிப்பினை மார்க்சிசத்தினை அபிவிருத்தி செய்வதும் அதன் சொந்த மார்க்சிசப் புரட்சிக் கட்சியை கட்டியெழுப்புவதுமே. இது தொழிலாள வர்க்கத்துக்கு தவிர்க்க முடியாத தேவையாகும். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும் அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தினதும் சிறப்பு முக்கியத்துவம் இங்குதான் உள்ளது. எமது இயக்கம் மட்டுமே அதன் வரலாறு, அது போராடும் வேலைத்திட்டத்தின் மூலம் தொழிலாளர் வர்க்கத்துக்கு அவசியப்படும் தொழிலாளர் வர்க்கம் ஒரு அனைத்துலக வர்க்கம் என்ற முறையில் எமது கட்சி முதலாளித்துவத்தினை தூக்கிவீசி அதனை சோசலிசத்தின் மூலம் பதிலீடு செய்யும் அடிப்படை வேலைத்திட்டத்தினை முன்வைக்கின்றது. இந்த அரசியல் அடிப்படையில் அத்தகைய ஒரு வேலைத்திட்டமும் உலகக் கட்சியாக நான்காம் அகிலத்தைக் கட்டி எழுப்புவதும் மட்டுமே பொருளாதார வாழ்க்கை பூகோளமயமாக்கப்பட்டதுடனும் காலவதியான தேசிய அரச முறையை தகர்த்து எறியும் வரலாற்றுத் தேவையுடனும் புதியதும் உயர்ந்த அடிப்படையிலும் பொருளாதார சமூக வாழ்க்கையை மறுசீரமைப்பதுடனும் தொடர்புபட்டு நிற்கின்றது.


இதுவே—உலக சோசலிசப் புரட்சி வேலைத்திட்டம்-முதலாளித்துவத்தின் மரண நெருக்கடியால் சிருஷ்டிக்கப்பட்ட வகுப்புவாதம், இனவாதம், பாசிசம், யுத்தத்துக்கான ஒரே பதிலீடாகும்.

## மே தினத்தின் உதயம்

மே தினத்தின் வரலாற்றுத் தோற்றம் தொழிலாளர் வர்க்கத்தின் முதலாவது பரந்த சோசலிஸ்ட் கட்சிகளின் தோற்றத்துடன் இணைந்து கொண்டுள்ளது. ஒரு நூற்றாண்டின் முன்னர் இக் கட்சிகள் முழு முதலாளித்துவ அமைப்புக்கும் வர்க்க நனவு கொண்ட தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் சவாலை உள்ளடக்கிக் கொண்டிருந்தன. தொழிலாளர் வர்க்கத்தின் இந்த மாபெரும் சோசலிச, அனைத்துலகவாத பாரம்பரியங்கள் இன்று புனர்ஜீவனம் செய்யப்பட வேண்டும்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்த 1994 மே தினத்தில் அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டங்களுக்கு மரியாதை செலுத்துவதோடு, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவில் உள்ள எமது சக சிந்தனையாளர்களுக்கு தோழமை வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது. அத்தோடு அனைத்து தொழிலாளர்களையும் இளைஞர்களையும் முதலாளித்துவ சமுதாயத்தின் நிலைமையை ஆழமான முறையில் கவனத்திற் கொண்டு, எமது இயக்கத்தினால் மட்டும் முன்வைக்கப்பட்டுள்ள புரட்சிகரப் பாதையை மனங்கொள்ளுமாறு அழைக்கின்றோம்.


புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின்
வெளிநாட்டுக் கிளையின்
ட்ரொட்ஸ்கிச வெளியீடு
வெளிவந்துள்ளது




தொடர்பு: ஆனந்த வக்கும்புர
90, 1வது மளிகாகந்த ஒழுங்கை,
கொழும்பு – 10


## இந்திய....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனரல் மோட்டர்ஸ் கம்பனியுடன் இணைந்து கொண்டுள்ளது. இந்தியாவின் பிரிமியர் ஒட்டோ மோபைல் கம்பனி பிரான்சின் பேர்ஜோ சம்பனியுடன் ஒரு பங்காளி நிறுவனமாக சேர்ந்துகொண்டுள்ளதாக அறிவித்துள்ளது. டாட்டா இன்ஜினியரிங் நிறுவனம் ஜேர்மனியின் மேர்சிட்ஸ் பென்ஸ் கம்பனியுடன் இணைந்து செயற்படப் போவதாக அறிவித்துள்ளது. இந்த வரவு செலவுத் திட்ட சிபார்சுகள் இந்த ஏகாதிபத்திய மூலதனப் பாய்ச்சலுக்கும் உள்ளூர் கைத்தொழில்களின் முழு அளவிலான அழிப்புக்குமான நிலைமையை பேலும் உருவாக்கும், உக்கிரமாக்கும் திட்டமாகவே அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90ல் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால்
மஹரகம நாகஹவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.